
# அருள்ஜோதி

APRIL 2023 | ARUL JOTHI | சன்மார்க்க மாத இதழ் | விலை ரூ.10/



அருட்பெருஞ்ஜோதி
தனிப்பெருங்கருணை


எல்லா உயிர்களும் இன்புற்று வாழ்க


அருட்பெருஞ்ஜோதி
அருட்பெருஞ்ஜோதி


## தேனி மாவட்டத்தில் வடுகபட்டி என்ற இடத்தில் தொடங்க இருக்கின்ற

# அருள்ஜோதி அன்ன ஆலயம்

Aruljothi annaalayam





கட்டபடும் வீட்டின் அளவு விவரம்:

1. தரை தளம் மொத்த சதுர அடி = 600 SFT X1600 = ரூ.9,60,000/-

பணம் கொடுக்க வேண்டிய தவணை முறைகள்:

1. முதல் தவணை தரைவீடு& Basement (30%) = ரூ2,88,000/-
2. 2வது தவணை Intel level வரை (25%) = ரூ.2,40,000/-
3. 3வது தவணை Roof level வரை (20%) = ரூ.1,92,000/-
4. 4வது தவணை டைல்ஸ் பெயிண்டிங் பிளம்பிங் வயரிங் வரை(23%) = ரூ.2,20,800/-
5. 5வது தவணை அணைத்து பணிகளும் முடிந்ததும் (2%) = ரூ. 19,200/-
6. TIN SHEET SHED SFT =125 SFT X1200 = ரூ.1,50,000/-
7. ROOF STONE AREA =1200SFTX650 =ரூ.7,80,000/-

மொத்தம் = ரூ.**18,90,000/-**

**இச்சபை அமைய தயவு உள்ளம் கொண்ட அருளாளர்கள் அனைவரும் இந்த அருட்சேவையில் பங்குகொள்ளவும். தொடர்புக்கு: 9003034056**




# அருள்ஜோதி

சுத்த சன்மார்க்கத் தமிழ் திங்களிதழ்

தனிஇதழ் ரூ.10/- ஆண்டு சந்தா ரூ.110/-

அருள்: 27 சுபகிருது ஆண்டு/ பங்குனி-சித்திரை / ஏப்ரல் -2023 ஜோதி: 4

மாத பூசத்திருநாள்: 27.4.2023 அடுத்த மாதம் பூசம்: 24.5.2023

தெய்வத்திரு.
**சதீஷ்ராஜ் அடிகளார்,**
நிறுவனர்

தயவுத்திருமதி.
**தனலட்சுமி அம்மையார்,**
ஆசிரியர், வெளியிடுபவர்
மற்றும் உரிமையாளர்

பதிவு அலுவலகம்:
**திருஅருட்பிரகாச வள்ளலார் அலுவலகம்,**
புதிய எண் 33, பழைய எண். 17, கௌனடி சதுக்கம்,
முதன்மைச்சாலை, சென்னை- 600011.
தொடர்புக்கு: 044-25570770 9003034056


## பொருளடக்கம்


| தலைப்பு | பக்கம் |
|---|---|
| வள்ளலாருக்கு மட்டுமே வாய்த்த வரங்கள் | 4 |
| ஜீவகாருண்ய வினா-விடை | 6 |
| அருட்பெருஞ்ஜோதி அகவல் உரை | 8 |
| சன்மார்க்கத் தெய்வீகத் திருமணம் | 10 |
| கோபத்தை எளிதாக கையாள 10 தகவல்கள் | 12 |
| அனுபவ ஆனந்த தீபிகை உபதேச வினா-விடை | 15 |

| தலைப்பு | பக்கம் |
|---|---|
| தவத்திரு. சதீஷ் அடிகளார் | 16 |
| உயிரின் உரிமை | 20 |
| நீங்களும் கல்வித்தொண்டு செய்யலாம் | 23 |
| அன்பர்களின் அனுபவங்கள் | 24 |
| இராமலிங்க சுவாமிகள் திருவுள்ளம் | 26 |
| எவ்வளவு சாப்பிட வேண்டும் | 31 |

# வள்ளலாருக்கு மட்டுமே வாய்த்த வரங்கள்

(மூன்றாவது தத்துவம்)

## இரக்கமே வடிவாய் ஆனது

தயவு, கருணை, இரக்கம் மூன்றும் ஒரே பொருளையே குறிக்கும் என வள்ளலார் தம் உரைநடைப் பகுதியில் குறித்துள்ளார். கருணையே வடிவாய் பிறர்களுக்கு அடுத்த கடுந்துயர் அச்சமாதிகளைத் தருணநின் அருளால் தவிர்த்து அவர்களுக்கு இன்பம் தர எனக்குள் ஆசை பொங்குகின்றது எனப் பிள்ளைச் சிறு விண்ணப்பத்தில் குறித்துள்ளார். இங்கே என்னையும் இரக்கம் தன்னையும் வேறு வேறாக பிரித்து வைக்காது நான் வேறு இரக்கம் என்பது வேறல்லாது ஒன்றாக இருக்கச் செய்தீர் என ஆண்டவருக்கு நன்றியும் பாராட்டுகிறார்.

இவ்வாறு கருணையே வடிவாய் இருப்பவர் ஆண்டவர் ஒருவரே. அவர் இயற்கை உண்மை வடிவினர் என்பார் வள்ளலார். ஆக, இயற்கையே கருணை வடிவாய் உள்ளது. அந்த இயற்கை உண்மை வடிவினராகவே வள்ளலார் ஆனதினாலே ஆண்டவருக்கு அடுத்து, வள்ளலாரை கருணையே மயமாக ஆக்கினார். பாடலைப் பார்ப்போம்.

**என்னையும் இரக்கம் தன்னையும் ஒன்றாய்**
**இருக்கவே இசைவித் திவ்வுலகில்**
**மன்னிவாழ் வுறவே வருவித்த கருணை**
**வள்ளல் நீ நினக்கிது விடயம்**
**பன்னலென் அடியேன் ஆயினும் பிள்ளைப்**
**பாங்கினால் உரைக்கின்றேன் எந்தாய் 3501**

இரக்கமும், பெருமானும் வேறல்லாது ஒன்றாய் இருக்கவே பெருமான் வருவிக்க உற்றார் என்கின்ற ஒரு புதிய செய்தி இங்கே நமக்குக் கிடைக்கிறது.

### நான் பெற்ற நெடும் பேற்றை ஓதி முடியாது

வள்ளலாருக்கு மட்டுமே வாய்த்த வரங்கள் என்றதற்கு ஒப்ப, வள்ளற் பெருமானே நான் பெற்ற நெடும் பேற்றை ஓதி முடியாது என்று கூறுகிறார். இங்கே அவர் குறிப்பிடும் நெடும் பேறு என்பதை மட்டுமே வாய்த்த என நான் தலைப்பு இட்டுள்ளேன்.

இந்த நெடும் பேறு என்பது அவரிடமிருந்து என்றும் விலகாது. பெருமானுக்குத் துணை நிற்கும் என்பது, பெருமான் பெற்ற மரணமில்லாப் பெரு வாழ்வின் நெடும் பேற்றுக்கு ஒரு உதாரணம். "இப்பாராதி பூதம் அடங்கும் காலும் நின்னையே. போற்றி மகிழ்ந்து பாடுவேன்" எனக் குறித்துள்ளார். மண், நீர், தீ, காற்று, வான் ஆகிய ஐந்து பூதங்களும் தன்னுள் அடங்கி இல்லாது போகும் காலம் வரையில் நான் சாவாது நின்னைப் பாடி மகிழ்வேன் என்கின்றார் வள்ளலார். இப்பொழுது பாருங்கள் பெருமான் பெற்ற நெடும் பேற்றை, மரணமில்லாப் பெருவாழ்வை.

நடு இரவில் ஆண்டவர் வந்து பெருமானாரை எழுப்பி, அருட்சோதியைப் பெருமானார் கையிற் கொடுத்தார். கொடுத்ததோடு அமையாமல் பெருமானாரின் உடலுள் உள்ளத்தில் சூழ்ந்து வள்ளலாராகவே ஆண்டவர் ஆகிவிட்டார். இப்பொழுது வள்ளலாரே ஆண்டவர் ஆகிவிட்டார். இதைக் கண்ணால் காண்கிறார். உணர்வால் நன்கு உணர்கிறார். இவ்வாறு தானே இறையானதையும், மற்ற மற்ற ஆற்றல் அனைத்தையும் பெற்ற வியப்பை எண்ணுகிறார். அவர் பெற்ற ஆற்றல்கள் எவ்வளவு என்று எண்ணிப் பார்க்கிறார். அவரால் எண்ண முடியவில்லை.

பூதங்கள் ஒவ்வொன்றும் எவ்வளவு அளவுடையது என்று அளவிட்டுப் பாடிய அவரால் தான் பெற்ற நெடும் பேற்றை அளவிட முடியாது என்பதையே ஓதி முடியாது என்று கூறுகிறார். பாடலைப் பார்ப்போம்.

பாதி இரவில் எழுந்தருளிப் பாவி
யேனை எழுப்பியருட் சோதி அளித்தென்
உள்ளகத்தேசூழ்ந்துகலந்துதுலங்குகின்றாய்
நீதி நடஞ்செய் பேரின்ப நிதிநான் பெற்ற
நெடும் பேற்றை ஓதிமுடியா தென்போலிவ்
வுலகம் பெறுதல் வேண்டுவனே *3630*

இவ்வாறு நான் பெற்ற நெடும் பேறுகள் போல, உலகவர் ஒவ்வொருவரும் பெற்று மகிழ வேண்டும் என நான் அருட்பெருஞ் சோதியை வேண்டிக் கொண்டே இருக்கிறேன் என்கிறார்.

### இனி எந்த வழியிலும் உன்னைப் பிரிய மாட்டேன் எனத் தன்மேல் ஆணையிட்டுக் கூறியது

சென்ற பகுதியில் வள்ளலார் தம் உடம்பில் புகுந்து உள்ளத்தில் தங்கி, அவராகவே ஆண்டவர் ஆகிவிட்ட நிகழ்வைப் பார்த்தோம். இங்கே அவ்வாறு தாம் கலந்த ஆண்டவரே இராமலிங்கம் உன்னை விட்டு எந்தக் காரணம் கொண்டும் இனி நான் பிரிந்து போகாது நீயாகவே நான் இருப்பேன். இது நம் ஆணை எனத் தன் மேல் சத்தியம் இட்டு உரைத்தார்.

இப்பாடலின்படி வள்ளலாரின் ஒளி உருவமே ஆண்டவரது உருவம். வள்ளலாரை வணங்கும் போது அருட்பெருஞ்சோதி ஆண்டவரையும் நாம் வணங்குகிறோம். அருட்பெருஞ் சோதியை வணங்குபவர்கள் வள்ளலாரை வணங்குகிறார்கள் என்ற மிகப் பெரிய ஒற்றுமையை, வேற்றுமை இல்லாது உண்டாக்கித் தருகிறார் ஆண்டவர்.

வள்ளலார் தம் உடம்பில் அருட்பெருஞ் சோதி ஆண்டவர் புகுந்து அவராகவே ஆகிய பாடல்கள் அருட்பாவில் அதிகம் இருந்த போதிலும், கீழ்வரும் பாடலில் இனி எந்தக் காரணம் கொண்டும் உன்னை விட்டுப் பிரியேன். இது என் ஆணை எனத் தன்மேல் சத்தியமிட்டுக் கூறியது நமது நெஞ்சை நெகிழ்விக்கின்றது அல்லவா? பாடலைப் பார்ப்போம்.

**அந்நாளில் அம்பலத் திடைவாயில் இடையுனக்**
**கன்புடன் உரைத்த படியே**
**அற்புதம் எல்லாம் வல்ல நம்மருட் பேரொளி**
**அளித்தனம் மகிழ்ந்துன் உள்ளே**
**இந்நாள் தொடுத்துநீ எண்ணிய படிக்கே**
**இயற்றி விளையாடி மகிழ்க**
**என்றும் இறவாநிலையில் இன்பஅனு பவனாகி**
**இயல்சுத்தம் ஆதிமூன்றும்**
**எந்நாளும் உன் இச்சை வழிபெற்று வாழ்கயாம்**
**எய்திநின் னுட்கலந்தேம்**
**இனிஎந்த ஆற்றினும் பிரிவுறேம் உண்மைஈ**
**தெம்மாணை என்ற குருவே 3680**

உன்னைப் பிரிய மாட்டேன். உண்மை ஈது. உண்மை மட்டும் அல்ல என்மேல் சத்தியமாக என்றும் கூறுவது காண்க. என்மேல் ஆணையாக என்றால் சத்தியமாக என்று தானே பொருள்.

–தொடரும்

# ஜீவகாருண்ய வினா-விடை

**111.ஜீவகாருண்யத்தில் கடைப்பட்ட தடை எது?**

ஆசை, இம்மை இன்பத்தைச் சிறிது தடுத்தலால் கடைப்பட்ட தடை

**112.ஜீவகாருண்யத்தின் வல்லபம் யாது?**

பிற உயிர்களிடத்து பசி, கொலை முதலியவற்றுள் எதனால் காருண்யம் தோன்றியதோ, அதனால் அவ்வுயிர் வருந்தாதபடி, அதை நீக்குதற்கு முயல்விப்பது அதன் வல்லபம் ஆகும்.

**113.ஜீவகாருணியத்தின் பிரயோஜனம் யாது?**

உயிர்களுக்கு இன்பம் உண்டு பண்ணுவதே அதன் பிரயோஜனம் ஆகும்.

**114.ஜீவர்கள் தேக போகங்களை தங்கள் இச்சையால் அடைந்தவர்கள் அல்ல. எப்படி?**

ஜீவர்கள் தங்கள் தங்கள் விருப்பத்திற்கு ஏற்ப தேக போகங்களை அடைகின்றார்கள் என்றால், தாங்கள் விரும்பிய வண்ண தேகங்களையும் போகங்களையும் அடைய வேண்டும். அப்படி இன்றி சிலர் தங்கள் விருப்பத்திற்கு மாறான பழுதுள்ள அங்கம் உள்ளவர்களாகவும் துக்கங்களை அனுபவிக்கின்றவர்களாகவும் இருப்பதால் ஜீவர்கள் தேக போகங்களை தங்கள் இச்சையால் அடைந்தவர்கள் அல்ல.

**115.ஜீவர்கள் தேக போகங்களை அடைவது இயற்கை என்பதும் இல்லை. எப்படி?**

இயற்கை என்பது எக்காலத்தும் வேறு படாமல் ஒரு தன்மையாக இருத்தல் வேண்டும். அப்படி ஒரு தன்மையாக இல்லாமல் பல வேறு வகைப்படுதலால் இயற்கை அல்ல என அறிதல் வேண்டும்.

**116.ஜீவர்கள் தேக போகங்கள் அடைவதற்கு கடவுள் காரணம் இல்லை. எப்படி?**

ஜீவர்களுக்கு தேக போகங்களை அளிப்பது கடவுள் விருப்பம் (இச்சை) என்றால் கடவுளின் கருணையும் நீதியும் உடையவர் ஆதலில் எல்லா ஜீவர்களுக்கும் ஒரு தன்மையாகச் சுக அனுபவங்களையே அடைவிக்க வேண்டும். அப்படி அடைவிக்காமையால் கடவுள் இச்சை அல்ல என அறிய வேண்டும்.

**117.இப்போதுள்ள சிருஷ்டி கடவுள் சிருஷ்டி அல்ல. மாயா சிருஷ்டி என்கிறார்களே, எப்படி?**

கடவுள், அருளால் சிருஷ்டித்த முதல் சிருஷ்டியில் தமது இயற்கை இன்பத்தை அனுபவிக்கும்படி விதித்த விதிகளை பழகாமையால், முயற்சி தவறினபடியால், அந்த அநாதி மல வாசனை (ஆணவம்)யின் முயற்சி பேதங்களால், பின் பல பல தேக போகங்கள் இரண்டாவது சிருஷ்டியில் நேரிட்டது. பல பல தேக போகங்கள் உருவாக காரணம் மாயையே.

**118. ஆன்மாவின் இலக்கணம் யாது?**

1.ஆன்மா எக்காலத்தும் உள்ளதாய் விளங்கப்பட்டது.

2. அது தோன்றுதலும், அழிதலும் இல்லை

3. அதை ஆக்கவும் அழிக்கவும் படாது. ஆன்மாக்கள் குடத்தைப் போல் செய்யப்படுவதானால் சுக துக்கங்களை அனுபவிக்க அறியாது. புண்ணிய பாவங்கள் அடைய மாட்டாது. குடம் அழிவது போல் அழிந்து விடும். அழியுமானால் பந்த முத்திகளும் இல்லை. புண் ணிய பாவங்களும் இல்லை. எனவே தேகம் அழியும் போது தேகத்தினுள் இருக்கின்ற ஆன்ம விளக்கமும், கடவுள் விளக்கமும் அழியாது. ஆன்மாக்களின் முயற்சி பேதத் தால், தேக, போக பேதங்களை அடைவது உண்மை.

–தொடரும்



# அருள்விளக்க மாலை பாடல்

தாய்முதலோ ரொடுசிறிய பருவமதில் தில்லைத்
தலத்திடையே திரைதூக்கத் தரிசித்த போது
வேய்வகைமேல் காட்டாதே என்றனக்கே எல்லாம்
வெளியாகக்காட்டியஎன் மெய்வறவாம் பொருளே
காய்வகைஇல் லாதுளத்தே கனிந்தநறுங் கனியே
கனிவிடத்தும் நனவிடத்தும் எனைபிரியாக் களிப்பே
தூய்வகையோர் போற்றமணி மன்றில்நடம் புரியும்
சோதிநடத் தரசேஎன் சொல்லும்அணிந் தருளே



## விளக்கம்

வள்ளல் பெருமான் வருவிக்கஉற்று 6 மாத குழந்தையிலே பெயர் வைப்பதற்காக அவர்கள் குல வழக்கப்படி சிதம்பரம் செல்வார்கள். அப்பொழுது வள்ளல் பெருமானாரின் தாய் (சின்னம்மையாரும்) தந்தை (ராமையா பிள்ளையாரும்) உறவினர்களும் சேர்ந்து சென்றார்கள்.

வள்ளல் பெருமானார் இறைவனால் வருவிக்கப்பற்ற குழந்தை என்பது யாருக்கும் தெரியாது. அங்கு சென்று பார்க்கும் பொழுது, அங்கே வழிபாடு நடந்து கொண்டிருக்கிறது. அப்பொழுது திரையை விலக்கி காட்டும் பொழுது, அங்கே நடராஜர் சிலை ஒன்று இருக்கிறது.

அதற்கு பட்டாடை உடுத்தி, ஆபரணங்களை அணிவித்து வைத்து காட்டுகிறார்கள். திரையை விலக்கியதும் உலகியலில் உள்ளவர்க்கு நடராஜர் உருவமாக பட்டாடை அணிந்து, ஆபரணம் அணிந்து இருக்கிறார் என்பது.

ஆனால் வள்ளல் பெருமானார் தில்லைத் தலத்திடையே திரைதூக்க எல்லா மக்களும் தரிசித்தபோது வேய்வகைமேல் காட்டாதே. என்பது ஆபரணங்களை அணிந்து, அலங்கரித்த உருவத்தை எனக்கு காட்டாமல் என்தனக்கே எல்லாம் வெளியாய் காட்டினாய்.

வள்ளல் பெருமான் வெளிகளிலே பல வெளிகளை சொல்கிறார். பறவெளி, பறம்பற வெளி, பறாவெளி, பெருவெளி, சிவவெளி என்ற எல்லாவற்றையும் சேர்த்து உருவம் இல்லாமல் வெட்ட வெளியாக காட்டிய என் மெய்உறவாம் பொருளே என்கிறார்.

அடுத்து காய்வகை இல்லாது, அதாவது காய் வகையை சேராமல் கனிந்த நற்பழமே என் உள்ளத்தை கனிந்த நறுக்கணியே

அதாவது என் உள்ளத்தில் இருந்த தீமைகள், அச்சங்கள் எல்லாம் நீக்கிவிட்டு என் உள்ளத்திலே குடிகொண்டிருக்கின்ற கனி போன்று சுவையாக, இன்பமாக இருக்கக் கூடிய இறைவனே, எனது தந்தையே, எனது அருட்பெருஞ்ஜோதி ஆண்டவரே எனக் கூறுகிறார்.

நிஜத்திலும் சொப்பனத்திலும் என்னை பிரியாமல் இன்பமாய் இருக்கக்கூடிய இறைவனே என்று சொல்கிறார் அருட்பெருஞ்ஜோதி ஆண்டவர்.

தூய்வகையோர் என்பது– சமரச சுத்த சன்மார்க்கத்தை சேர்ந்தவர்கள் கொலை, புலையை தவிர்த்தவர்கள். உயிரின் மேல் தயவும் கருணையும் காட்டுகின்றவர்கள். இப்படிப்பட்ட அடியார்கள் எல்லாம் போற்ற மணிமன்றில் நடம்புரியும் ஜோதி நடத்தரசே...

அம்பலத்தில் அருட்பெருஞ்ஜோதியாக இருந்து கொண்டு அருளாட்சி செய்து கொண்டு இருக்கின்ற அரசனே!, அருட்பெருஞ்ஜோதி ஆண்டவரே!, என் சொல்லும் அணிந்தருளே!

நான் சொல்லுகின்ற பாடல்களை எல்லாம் ஏற்றுக் கொண்டு மகிழ்ந்து மனஉவந்து எனக்கு அருள்வாயாக!

# அருட்பெருஞ்ஜோதி

## அகவல் உரை

**காட்டிய உலகெலாம் கருணையால் சித்தியின்**
**ஆட்டியல் புரியும் அருட்பெருஞ் ஜோதி 218**

யாவரும் காண நின்ற உலகமெங்கும், திருவருளால் செயல்படும் பலவகைச் சித்திகள் மூலம் செயற்படும் நல்லன யாவற்றையும் (கோள்களில் கால, பருவ, தோற்றம், மறைவு மாறுபாடுகளை அமைத்து), இயக்கி அருள்வது அருட்பெருஞ் ஜோதி.

**எம்குலம் எம்இனம் என்பதொண் ணூற்று ஆறு**
**அங்குலம் என்றுஅருள் அருட்பெருஞ் ஜோதி 220**

எங்கள் குலம், எங்கள் இனம், என உலக மக்கள் கூறுவதெல்லாம் தொண்ணூற்றாறு விரலிடை அளவு எட்டு சாண்) உயரம் கொண்ட உடலைக் கொண்டு, கூறுவதாகும் (ஆன்மாவுக்கு இவை இல்லை); இறைவன் படைப்பில் யாவரும் சமமே என அறிவித்தருள்வது அருட்பெருஞ் ஜோதி.



**எம்மதம் எம்இறை என்ப உயிர்த்திரள் அம்மதம்**
**என்றுஅருள் அருட்பெருஞ் ஜோதி 222**

எங்கள் மதம், எங்கள் இறைவன் என்று மக்கள் கூட்டம் எவற்றைக் கூறுமோ, அதுவே நமக்கும் பொருந்தும் அருளாகிய மதமாம் என்று தெரிவித்தருள்வது அருட்பெருஞ் ஜோதி.

**கூறிய கருநிலை குலவிய கீழ்மேல்**
**ஆறுஇயல் எனஉரை அருட்பெருஞ்ஜோதி 224**

யோக நெறியில் கூறப்பட்ட மூலாதாரத்தை, பொருந்திய கீழ் நிலையாக கொண்டு மேன்மேலாய் நிற்கும் ஆதாரம் மூலம், தொப்புள், மேல்வயிறு, இதயம், கழுத்து, புருவநடு ஆறினுள்ளும் ஆன்மா உடற்குள் இயங்குகின்றது எனத் தெரிவிப்பது அருட்பெருஞ் ஜோதி.

(வேறு)

உயிரினங்களில் பிறவி வகையாக ஓரறிவுள்ள தாவரங்கள் முதல் ஐயறிவு வரை உள்ள உயிரினங்களாயும், ஆறறிவுள்ள மனிதராயும் பிறவி வாய்க்கின்றது. இவற்றில் ஐயறிவு வரை உள்ளவற்றை தாழ்ந்த பிறவி என்றும், மனிதப் பிறவியை உயர் பிறவி என்றும் ஆறு வகையாக அமைய வகுத்துள்ளது அருட்பெருஞ் ஜோதி.

**எண்தர முடியாது இலங்கிய பற்பல**
**அண்டமும் நிறைந்துஒளிர் அருட்பெருஞ் ஜோதி 226**

அண்டவெளியில் இயங்கும் இத்தனை என எண்ணிச் சொல்ல முடியாத அளவில் விளங்குகின்ற பலவாகிய உலகங்கள் அனைத்திலும், அகத்தும் புறத்தும் நிறைந்து ஒளிர்ந்து ஒளி மயமாய்) விளங்குவது அருட்பெருஞ் ஜோதி.

**சார்உயிர்க்கு எல்லாம் தாரகம் ஆம்பரை ஆரு**
**யிர்க்கு உயிராம் அருட்பெருஞ் ஜோதி 228**

உடலைச் சார்ந்து வாழும் உயிர் வகை யாவற்றுக்கும், ஆதாரமாகிய சிவசக்தி அருளுகின்ற. எல்லா அரிய உயிர்வகைகளின் உள்நின்று இயக்கும் உயிராக, நிறைந்து விளங்குவது அருட்பெருஞ் ஜோதி.

(வேறு)

இறைவனைச் சார்ந்து வாழும் உயிர்களுக்கு பரையாகிய மாயை ஆதாரமாக விளங்கி அருள் புரியும். சாராத உயிர்களை மாயை உலகியலில் உழலச் செய்யும். சாரும் உயிர்களின் உள்நின்று அருளுவது அருட்பெருஞ் ஜோதி.

# வள்ளலார் வரலாறு

## (மாணவர்களுக்கான ஒருவரி வினா-விடை)

**71 தமிழ் ஆண்டு எது ?**
பிரபவ ஆண்டு, வைகாசித்திங்கள், 11ஆம் நாள்.

**72. கிழமை எது ?**
வியாழக்கிழமை.

**73. தருமச்சாலை எங்குத் தொடங்கப்பட்டது?**
வடலூரில் அவ்வூர் மக்கள் இனாமாகக் கொடுத்த 80 காணி நிலத்தில்.

**74. வடலூருக்கு வழங்கும் வேறு பெயர்கள் யாவை?**
பார்வதிபுரம், உத்தரஞானசிதம்பரம், உத்தரஞானசித்திபுரம்.

**75. சத்தியதருமச்சாலை தொடக்க விழாவின் போது நிகழ்ந்த நிகழ்ச்சிகள் யாவை?**
1. அணையா அடுப்பு ஏற்றிவைக்கப் பட்டது.
2. சத்தியஞானதீபம் எனும் அணையா விளக்கு ஏற்றப்பட்டது. 3. ஜீவகாருண்ய ஒழுக்கம் வாசிக்கப்பட்டது.

**76. தருமச்சாலை முதன்முதலில் எவ்வாறு அமைக்கப்பட்டது?**
விழல் வேய்ந்த மண் கட்டடமாக (கூரைக் கட்டடமாக).

**77. தருமச்சாலை எதற்காகத் தொடங்கப்பட்டது?**
இல்லை என்று சொல்லாமல், எப்போதும், எல்லார்க்கும் உணவு கொடுக்க.

**78. இத்தருமச்சாலையின் வேலை என்ன?**
ஜீவகாருண்யவழி நடத்தலும், மாற்றுத் திறனாளிகட்கு உதவலும்.

**79. ஜீவகாருண்யம் என்றால் என்ன ?**
ஜீவன்–உயிர், காருண்யம் இரக்கம்.
உயிர்களிடத்தில் இரக்கம் காட்டுதல் –தயவுகாட்டுதல் என்பதே ஜீவகாருண்யம்.

**80. ஜீவகாருண்யத்தின் மிக முக்கியச் செய்தி எது ?**
பசிபோக்கலும், கொலை புலை நீக்கலும்.

# சன்மார்க்கத் தெய்வீகத் திருமணம்



உதாரணமாகக் கடைசி மாதவிலக்கு பிப்ரவரி மாதம் 1ந் தேதி ஏற்பட்டதாக வைத்துக்கொண்டால், அத்துடன் இரகசிய எண் 7ஐக் கூட்டிக்கொள்ள 8ஆகிறது. பிப்ரவரி மாதத்திற்கு 8ஆகிறது. பிப்ரவரி மாதத்திற்கு எதிரே அட்டவணையின் கடைசி கலத்தில் நவம்பர் என்றிருக்கிறது. ஆகவே நவம்பர் மாதம் 8–ந் தேதி பிரசவ காலமாகும்.

பெண்ணின் மாதவிடாய் தொடங்கிய தேதியுடன் அட்டவணையில் கொடுக்கப் பட்டிருக்கும் எண்களை ஆங்கில மாதத்திற்குத்தக்கபடி கூட்டிக்கொள்ள பிரசவமாகக்கூடிய மாதத்தையும் குறிப்பிட்ட தேதியையும் முன்கூட்டியே அறிந்து கொள்ளலாம். உதாரணமாக ஒரு பெண் பிப்ரவரி மாதம் ஒன்றாம் தேதி கடைசி மாதவிலக்கு ஏற்பட்டதாக வைத்துக் கொண்டால் அப்பெண்ணுக்கு ஏழு என்கிற இரகசிய எண்ணைக் கூட்டிக்கொண்டால் (1+7=8) எட்டு என ஆகிறது. பிப்ரவரி மாதம் என்பதால் பிரசவ மாதமான நவம்பர் மாதத்தில் எட்டாம் தேதி (8–11ல்) பிரசவ காலமாகும். முன்பு சீனநாட்டு சித்தரின் கணக்குப்படி ஆணா/பெண்ணா என்பதை அறிந்து கொண்டோம். இந்த தமிழ் நாட்டு சித்தரின் கணக்குப்படி ஒரு பெண்ணுக்கு எந்த மாதம் எந்த தேதியில் குழந்தை பிறக்கும் என்பதை அறிந்து கொள்ளலாம். இது ஒரு மகப்பேறு இரகசியமாகும்.

கொடுக்கப்பட்ட அட்டவணை பொதுவானது. சில பெண்களுக்கு முதல் பிரசவத்தில் 280 நாட்களுக்கு சிறிது முன்னும் பின்னுமாக பிரசவம் ஏற்பட வாய்புண்டு. முக்கியமாகக் கவனிக்க வேண்டியது குழந்தை விரும்பும் பெண் தனக்கு ஏற்படும் மாதவிலக்கை ஆங்கிலத் தேதியில் அவசியம் ஒரு டைரியில் அல்லது ஆங்கிலக் காலண்டரில் குறித்து வைத்துக் கொள்ளவேண்டும். மாதவிலக்கு ஏற்படும் தேதி மிக மிக முக்கியமானதாகும். மாதவிலக்குத் தேதியைக் கொண்டுதான் குழந்தை பிறக்கும் ஆங்கில மாதத்தையும்.

தேதியையும் கணக்கிடமுடியும். தவறாகக் கணக்கெடுத்துக் கொண்டு குழப்பிக் கொள்ள வேண்டாம். கவனத்தில் கொள்ளவும். மகப்பெறு பெறும் பெண்கள் தங்களுடைய துல்லியமான வயதையும், மாதவிடாய் ஆகும் தேதி நேரத்தையும் கண்டிப்பாகக் குறித்து வைத்திருந்து கணக்கீட்டுப்பார்த்து தங்களுக்குப் பிறக்கும் குழந்தை ஆணா, பெண்ணா என்பதையும் எந்த மாதத்தில் எந்த தேதியில் பிறக்கும் என்பதை முன்கூட்டி அறிய ஒரு நல்ல செய்தியாகும். இது பாதுகாத்து வைக்க வேண்டிய பெட்டகமாகும்.

**முக்கியக் குறிப்பு :**

கொடுக்கப்பட்டிருக்கும் அட்டவணைகள், பொதுவானவை, சில பெண்கள் முதல் பிரசவத்தில் 280 நாட்களுக்குச் சிறிது முன்னதாகவே பிரசவித்து விடுவதும் உண்டு. (ஒரு சதவிகிதம்)



பிரசவ வேதனை ஏற்பட்டு பனிக்குடம் உடைந்து, தாயின் கருப்பையிலுள்ள சிசுவும், நஞ்சும் வெளிப்படும் கிரியைக்கு "பிரசவம்" என்று பெயர்.

"பிரசவ வேதனை" என்பது கருப்பையிலுள்ள சிசுவை வெளித்தள்ள கருப்பை சுருங்குவதேயாகும்.

பிரசவம் என்பதை இயற்கை வெகு அமைதியாகவும். அழகாகவும் செய்து முடிக்கிறது. இயற்கைக்கு முரணாக எதைச்செய்தாலும் தொந்தரவுகள் விளைகின்றன. (சீசரியேன் செய்வதைத் தவிர்க்கவும்)

பிரசவ வேதனை ஆரம்பமாகும் முன் இரத்தம் தோய்ந்த சளிச்சீதம் வெளிப்படுகிறது. இதை ஷோ என்று கூறுகிறோம். இவ்விதம் கண்டுவிட்டால் பிரசவ காலம் ஆரம்பித்து விட்டதெனக்கொள்ள வேண்டும். இந்நிலைமை ஏற்பட்டுவிட்டால் இரண்டு அல்லது மூன்று நாட்களுக்குள்ளாக எப்பொழுது வேண்டுமானாலும் பிரசவமாகலாம்.

**பிரம்மச்சர்யம் காக்க**

**பிரம்மச்சர்யம் நழுவாமல் இருக்க வேண்டுமானால்:**

1. பெண்களை ஆசையுடன் பார்த்தல்
2. அவர்களைத் தீண்டுதல் (தொடுதல்)
3. அவர்களுடன் விளையாடுதல்
4. அவர்களைப் புகழ்ந்து பேசுதல்
5. அவர்களை இரகசியமாக சந்தித்துப் பேசுதல்
6. அவர்களுடன் உடல்உறவு கொள்ள வேண்டும் என எண்ணுதல்.
7. உடல்உறவு கொள்ள நிச்சயம் செய்தல்
8. உடல்உறவு கொள்ளுதல்

இப்படியாக உள்ள எட்டுக் குணங்களையும் எண்ணத்தாலும் தொடாமல் இருந்தால் பிரம்மச்சரியம் கைகூடும். இதனைக் கடைபிடித்தால் சரீரம், இந்திரியங்கள், மனம், புத்தி பிரகாசித்து வீரிய லாபம் ஏற்பட்டு சாப நிவர்த்தியும் ஏற்பட்டு, தீர்க்காயுளுடன் விரைவில் யோக சித்தியை அடைவர்.

பிரம்மச்சரியம் ஆண், பெண் இருபாலருக்கும் பொதுவானது. ஆண் பெண்களைப் பற்றியும் பெண்கள் ஆண்களைப் பற்றியும் மேற்கண்ட எட்டு குணங்களைப் பின்பற்ற வேண்டும். பிரம்மச்சரியத்தின் இந்த எட்டு குணங்களும் போற்றுதற்குரியது. பின்பற்ற வேண்டியதாகும்.

## சமைத்த உணவு உண்பவர்களுக்கு சில யோசனைகள்

சமைத்த உணவு சாப்பிடுவோர் மதியம் ஒரு வேளை மட்டும் பால், தயிர், மோர், வெண்ணெய், நெய், சேர்க்காமலும் பைத்தம் பருப்பு சேர்த்துக்கொண்டு, புளிக்குப் பதில் எலுமிச்சை சாறும், மிளகாய்க்குப் பதில் மிளகும், கடுகுக்குப் பதில் சீரகமும் சேர்த்து சமைத்துச் சாப்பிடப் பழகிக்கொள்ளவேண்டும். தினசரி ஒரு கீரை மசியல் செய்து அத்துடன் பூண்டு 5திரிகளும், சிறிதளவு சீரகம் மிளகு சேர்த்தும் கடைந்து சாப்பிடவேண்டும்.

இரவில் பழங்கள் மட்டும் சாப்பிட பழகிக்கொள்ள வேண்டும். காய்கறிகள் 1) சுரக்காய் 2) வெள்ளைப் பூசணிக்காய் 3) புடலங்காய் 4) பீர்க்கங்காய் 5) அவரைக்காய் 6) வெள்ளரிக்காய் 7) முட்டைக்கோஸ் 8) கேரட் 9) பீட்ரூட் 10) கத்தரிக்காய் 11) வெண்டைக்காய் 12) பாகற்காய் 13) கோவைகாய் 14) முள்ளங்கி இவைகளுடன் 1) தண்டுக் கீரை 2) சிறு கீரை 3) முருங்கைக்கீரை 4) வெந்தயக்கீரை 5) சிறுகீரை 6) அரைக்கீரை 7) புதினாக்கீரை 8) கொத்தமல்லிக் கீரை 9) கருவேப்பிலை 10) புளிச்சைக் கீரை 11) பசலைக் கீரை 12) அகத்திக் கீரை 13) முள்ளங்கிக்கீரை 14) தூதுவளைக் கீரை சமையலில் சேர்த்துச் சாப்பிட்டால் போதும். உருளைக்கிழங்கை வேகவைத்து அப்படியே சாப்பிடலாம். (எண்ணெய் சேர்க்காமல்) இவைகளை மட்டும் மாற்றி மாற்றி சாப்பிட்டு வந்தால் போதுமானது. இதில் இல்லாத காய், கீரைகளைத் தள்ளிவிடவும். நோய் நொடியின்றி வாழ, உதவும். (உணவில் இஞ்சி சேர்த்துக் கொள்ளலாம்)

# கோபத்தை எளிதாக கையாள 10 தகவல்கள்

**உள்ளெழும் கோபத்தையே தியானத்திற்கான நல்லாற்றலாக மாற்றும் பயிற்சி**

**இதற்கு அழகான ஒரு சிறு கதையைப் பற்றி பார்ப்போம்.**

ஒரு வாலிபனுக்கு எதற்கெடுத்தாலும் கோபம் வந்தது. அந்த வாலிபன் தன்னுடைய கோபத்தைக் கட்டுப்படுத்த முடியாமல் தவித்தான். ஒவ்வொரு முறையும் கோபம் தலைக்கேறி அவன் என்ன என்று தெரியாமலே பல பாவங்களை செய்துவிடுகிறான். அவன் தன்னுடைய நிலைமையை ஒரு சன்மார்க்க சாதுவிடம் சொல்லி, நீங்கள் தான் என் கோபத்தை கட்டுப்படுத்த ஒரு வழி சொல்ல வேண்டும் என்று கேட்கிறான்.

அந்த சாது சிறிது நேரம் சிந்தித்துவிட்டு, ஒரு வெள்ளை நிற பந்தை கொடுத்த உனக்கு எப்பொழுதெல்லாம் கோபம் வருகிறதோ அப்பொழுதெல்லாம். காலம் தக்க பதிலைக் கூறும் கடவுள் இருக்கிறார் எல்லாம் மாறும் என்று கூறி இந்த பந்தை ஓங்கி சுவரில் எரி. பிறகு அந்த பந்தை எடுத்து வந்து சுத்தம் செய்து, இரண்டு கைகளாலும் பிடித்துக்கொண்டு ஓரிடத்தில் அமர்ந்து, மூச்சை இழுக்கும் போது காலம் தக்க பதிலைக் கூறும் என்றும், விடும் போது கடவுள் இருக்கிறார் எல்லாம் மாறும் என்றும் 18 முறை கூறி இந்த பந்தை ஒரு தட்டில் வைத்துவிடு. 48 நாட்கள் இப்படி செய் உண்ணுடைய கோபத்தை எல்லாம் அந்த பந்து இழுத்துக்கொள்ளும். அதன் பிறகு அந்த பந்தை என்னிடம் எடுத்து வா என்றார் சாது.

அந்த வாலிபனும் சரி என்று கூறி பந்தை வீட்டிற்கு எடுத்துச்சென்றான். ஒரு நாள் அனவது மனைவியின் செயல் அவனுக்கு மிகுந்த கோபத்தை உண்டாக்கியது. அவனுக்கு கோபம் தலைக்கேறியது அப்பொழுது அந்த பந்தை எடுத்து வீட்டிற்கு வெளியே வந்தான். வீட்டின் சுவற்றில் பந்தை ஓங்கி எரிந்தான். அந்த பந்தானது அவன் எரிந்த வேகத்தில் சுவரில் பட்டு வேகமாக திரும்பி அவனைத் தாண்டி ஓடியது.

அவன் ஓடி சென்று பிடிப்பதற்குள், பந்து சாக்கடையில் விழுந்தது. அடடா இப்படி ஆகி விட்டதே என்று யோசித்து, அந்த பந்தை எடுத்து தண்ணீரில் அலசினான். பிறகு வீட்டிற்கு வந்த அவன் ஓரிடத்தில் அமர்ந்து பந்தை இரு கைகளாலும் பிடித்துக்கொண்டு 18 முறை மூச்சை உள்ளிழுக்கும் போது காலம் தக்க பதிலைக்கூறும் என்றும், வெளியே விடும் போது கடவுள் இருக்கிறார் எல்லாம் மாறும் என்றும் கூறி அந்த பந்தை ஒரு தட்டில் வைத்தான்.

தன் கோபம் குறைந்திருப்பதாக உணர்ந்தான். இப்படியே சில நாட்கள் சென்றன. மறுபடியும் ஒருநாள் அவனது பக்கத்து வீட்டுக்காரரின் செயல் மிகுந்த கோபத்தை தந்தது. உடனே இவன் காலம் தக்க பதிலைக்கூறும், கடவுள் இருக்கிறார் என்று கூறி பந்தை சுவற்றில் அடித்தான் சற்று வேகத்தை குறைத்து அடித்தான் அப்பொழுதும் அந்த பந்து அவனைத் தாண்டி சென்றது.

ஆனால் அது சாக்கடைக்கு செல்லும் முன் பந்தை பிடித்து விட்டான். பிறகு முன்பு சொன்னதைப்போலவே 18 முறை கூறி பந்தை தட்டில் வைத்தான். அப்பொழுது அவனுக்கு கோபம் மிகவும் குறைந்திருப்பதை உணர்ந்தான். பின்பு ஒரு நாள்



அவனது தாயின் செயல் மிகுந்த கோபத்தை உண்டாக்கியது. முன்பு கூறியது போலவே கூறி அந்த பந்து தன்னை தாண்டி செல்லாதவாறு சரியான வேதகத்தில், சரியான திசையில் சுவரில் அடித்தான். அது நேராக அவனை நோக்கி வந்தது. கையில் பிடித்துக்கொண்டான். முன்பு போல் காலம் தக்க பதிலைக் கூறும், கடவுள் இருக்கிறார் எல்லாம் மாறும் என்று கூறி பந்தை தட்டில் வைத்தான். அவனது கோபம் முற்றிலுமாக குறைந்திருப்பதை உணர்ந்தான்.

இப்படியே 48 நாட்கள் சென்றன. 48 நாட்களும் இப்படி கோபப்படாமல் இருந்ததால் அவனுக்கு ஏற்பட்ட நன்மைகளை அவனால் உணர முடிகிறது. அவனது மாற்றம், அவனின் தாய், சுற்றத்தார் என அனைவரையும் மாற்றியது. கோபத்தால் சாதிக்க முடியாததை அவனது அமைதி சாதிக்க முடிந்தது. அவன் அந்த சாதுவிடம் சென்று நடந்த எல்லாவற்றையும் கூறி அந்த பந்தை கொடுத்துவிட்டு, இந்த பந்து என்னுடைய அனைத்து கோபத்தையும் வாங்கிக்கொண்டது நன்றி என்றான். அப்பொழுது அந்த சாது சொன்னார் ஒவ்வொரு முறையும் நாம் கோபப்படும்பொழுது பந்தாகிய நமது மனமானது சாக்கடையாகிய தீயதில் சென்றுவிடும். அதனால் பாதிக்கப்படுவது முதலில் நாம் தான் இருப்போம்.

எனவே மனம் தீயதின் பக்கம் செல்லாமல் அதனைக் கட்டுப்படுத்தும் அறிவைப் பெற்றிருக்க வேண்டும. சாக்கடையில் விழுந்த பந்தை தண்ணீர் கொண்டு சுத்தம் செய்தது போல் தீயதில் விழுந்த மனத்தை உடனே விசாரித்து தூய்மை செய்து விட வேண்டும். பிறகு சாக்கடையில் விழாமல் பந்தை தடுப்பது போல், கோபத்தால் மனம் தீயதின் பக்கம் செல்லாமல் தடுக்கும் அறிவு உண்டாகும்.

பிறகு வீசப்பட்ட பந்து, சுவற்றில் பட்டு திரும்பியதை எளிதாக பிடிக்க பயிற்சி ஆனது போல் கோபத்தின் போது மனம் தீயதின் பக்கம் செல்லாமல் இருக்கும் பயிற்சி ஏற்படும். இப்பொழுது உங்கள் கோபம் அந்த பந்தில் இல்லை. உங்களுடைய கோபத்தை வெல்லும் ஆற்றலை உங்கள் அறிவு பெற்று விட்டது. உங்களுக்கு உள்ள தவறான நம்பிக்கையின் காரணமாகவே நான் இப்படி ஒரு முறையைக் கூறினேன். உண்மையில் கோபத்தின் போது காலம் தக்க பதிலைக் கூறும், கடவுள் இருக்கிறார் எல்லாம் மாறும் என்ற உணர்வை வரவழைத்துக் கொண்டால். கோபத்தை கையாளும் ஆற்றல் ஏற்படும். மூச்சுக் காற்றை மெல்ல இழுத்துவிடும் போது அந்த கோபம் நிலைக்காமல் ஆறத்தொடங்குகிறது. வள்ளல் பெருமானார் இதனை சினம் நிலையாமை என்பார். ஔவை பிராட்டி ஆறுவது சினம் என்பார்.




கோபத்தின் போது மௌனத்தைக் கடைபிடித்து அந்த இடத்தை விட்டு நகர்ந்து வேறு செயலில் ஈடுபட்டால். கோபம் மாறிவிடும். இதனைத் தான் வேறுவழியில் நீங்கள் விரும்பியது போல் கூறினேன் என்கிறார் சாது. இதுவரை கோபம் ஏன் உண்டாகிறது? கோபத்தால் வரும் தீமைகள் என்ன? கோபத்தை வெல்வதால் உண்டாகும் நன்மைகள் என்ன? என்று பார்த்தோம்.

இப்பொழுது கோபத்தைக் கையாளுவது எப்படி? உள்ளெழும் கோபத்தை நல்ஆற்றலாக மாற்றுவது எப்படி? என்று பார்க்கலாம்.

முகத்தின் மலர்ச்சியையும், அகத்தின் மலர்ச்சியையும் கொன்று விடுகின்ற சினத்தை விட ஒருவனுக்கு பகையானவை வேறு இல்லை என்கிறார் வள்ளுவன். அத்தகைய கொடிய கோபத்தை

எப்படி எளிதாக கையாளுவது என்றால்

(i) கோபம் ஏற்பட்டு விட்டால் வாய் மௌனத்தை கடைபிடிக்க வேண்டும்.

(ii) செவிக்குள் விழும் வார்த்தைகள் வெறும் சத்தம் என்று எண்ணி எதையும் காதில் வாங்கிக் கொள்ளக் கூடாது.

(iii) கண்கள் தன்னை கோபப்படுத்துபவரையும், கோபப்படுத்திய பொருளையும் அங்கே இருக்கின்ற மற்றவர்களையும் பார்க்காமல் இருக்க வேண்டும்.

(iv) சுவாசத்தை மெல்ல முழுமையாக இழுத்து, மெல்ல முழுமையாக விட வேண்டும்.

(v) கோபம் ஏற்பட்ட நேரத்தில், உடல் உழைக்கும் படியாக தோட்ட வேலைகள் செய்வது, உடற்பயிற்சி செய்வது நல்ல மாற்றத்தை தரும்.

(vi) கோபம் ஏற்படும் போது தவறு யார் மேல் இருந்தாலும், காலம் தக்க பதிலைக் கூறும், கடவுள் இருக்கிறார் எல்லாம் மாறும் என்ற வரிகளை நினைவுக்கு கொண்டு வர வேண்டும் எனவே அந்நேரத்தில் காலத்தால் எல்லாம் மாறும் கோபத்தால் மிகுந்த பாதிப்பே நேரும் என்ற தெளிவை அறிவு பெற்றுவிடும்.

(vii) நம்மை கோப்படுத்தியவரை எப்படியாவது முயற்சி செய்து மன்னித்துவிட வேண்டும். அவர் வாழ்வு சிறக்க வேண்டும் என்று இறைவனிடம் பிராத்தனை செய்ய வேண்டும். இதனால் நம்முடைய வாழ்வு சிறப்பாக அமையும் நம்முடைய கோபமும் குறைந்து ஆரோக்கியமும் பெறுகும். நம்முடைய கர்ம வினைகளும் கழிந்து புண்ணிய பலன்கள் அதிகரிக்கும் அவர்களும் மனம் திருந்துவதற்கு இது நல்ல வாய்ப்பாக இருக்கும். இதனால் அவர்களை விட நமக்கு தான் நன்மை அதிகம் என்பதை உணர வேண்டும்.

(viii) நம்மை ஒருவர் துன்புறுத்தும் போது நாம் யாருக்கோ, எப்பொழுதோ செய்த துன்பம் இன்று நமக்கு வந்திருக்கிறது என்று மனம் உணரும் பொழுது அந்த சூழ்வினை முற்றிலும் கழியும். நமது மனம் அமைதி பெறும் அந்த மனத்தில் இறைவன் குடியேரத் துடங்குவான்.

(ix) இந்த கோபத்தை நாம் நல்ல ஆற்றலாக மாற்ற முடியும். கோபத்தின் போது மௌனத்தை கடைபிடித்து, கண்களை மூடி ஓரிடத்தில் நிமிர்ந்து தனியாக உட்கார வேண்டும். நீண்ட நேரம் அசையாமல் உட்கார வேண்டும் என்ற எண்ணத்தை அந்த கோபத்திற்கு ஊட்ட வேண்டும். கோபத்தின் போது ஒருவனை அடிக்க வேண்டும், திட்ட வேண்டும் என்ற பல எண்ணங்கள் உருவாகும். அந்த எண்ணங்களை நிறைவேற்றத் துடிக்கும். அதை மாற்றி அதற்கு பதிலாக ஓரிடத்தில் அசையாமல் நிமிர்ந்து உட்கார வேண்டும் என்ற எண்ணத்தை அந்த கோபத்திற்கு ஊட்ட வேண்டும். அப்படி அசையாமல் உட்காரும் பொழுது, கோபத்தின் வேகத்திற்கு ஏற்றார்போல், அருட்பெருஞ்ஜோதி, அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங்கருணை என்ற மகாமந்திரத்தை தொடர்ந்து சொல்ல வேண்டும். உங்கள் கோபம் உடனே குறைவதையும் உள் இருந்த கோபம் நல் ஆற்றலாக மாறுவதையும் உணர்வீர்கள். சில நிமிடங்கள் தியானத்தில் உட்கார சிரமப்படுபவர்கள் கூட, கோபத்தின் போது இந்த பயிற்சிகளை செய்தால் சில மணி நேரம் தியானத்தில் உட்காறும் ஆற்றலைப் பெறுவார்கள். கோபமானது உள்ளிருந்து எழும் மிக பெரிய சக்தி, அதை நல்ல செயல்களின் பக்கம் திருப்பினால் நமக்கு மிகப்பெரிய ஆற்றல் கிடைக்கும்.

(x) அசைவம் உண்பவர்களால் கோபம், காமம் ஆகியவற்றை நம் கட்டுப்பாட்டில் வைத்திருக்க இயலாது. நமது கட்டுப்பாட்டில் இல்லாத எதுவும் நமக்கு துன்பத்தையேக் கொடுக்கும் எனவே அசைவத்தை முற்றிலும் தவிர்த்து விட வேண்டும்.



ஸ்ரீ சாது நாராயண ஞான தேசிகர் அருளிய

# அனுபவ ஆனந்த தீபிகை

## உபதேச வினா-விடை

உரையாக்கம்: ஜோதி, வீ.கோடீஸ்வரன், காஞ்சிபுரம்

**31.அருள் என்றால் என்ன?**

உலகிலுள்ள ஜீவர்களையெல்லாம் தன்னில் நிறைந்த ஜீவனைப் போன்ற ஜீவர்களென்று நினைத்தலாம்.

**32.இருள் என்றால் என்ன?**

அறிவு பற்றி படிப்பதை விட்டு மற்ற எல்லா சாஸ்திரங்களைப் படிப்பதேயாம்.

**33. புருடர் என்பவர் யாவர்?**

தனக்கு விரோதிகளானாலும் அவர்களின் அறியாமை நீங்கும்படி உபதேசம் செய்ய நினைப்பவர்.

**34. திருடர் என்பவர் யாவர்?**

இவ்வுலகத்தில் மூட நம்பிகையுள்ளவர்களுக்கு கடவுளும், குருவும் உண்டென்று உபதேசிப்பவர்.

**35.குருடர் என்பவர் யாவர்?**

ஆன்மாவாகிய தம்மை அறியாதவர்களும், குருபோல் பொய் வேடம் தரிப்பவர்களும் ஞானக் கண்ணில்லாத குருடர்களாவார்கள்.

**36. மருள் துறந்தவர்கள் யாவர்?**

மயக்கம் தெளிந்து, ஆசை நீங்கி வாழ்கின்ற புண்ணியவான்களாம்.



**37.பொய்யர் என்பவர் யாவர்?**

தேகாபிமானம் ஊட்டி, அவ்வாசையில் உழலவைத்து, வாழ்நாளை வீணாய்க் கழிப்பவர்.

**38.மெய்யர் என்பவர் யாவர்?**

சீடனின் மயக்கம் தீர, வேதத்தின் முடிவாகிய ஆன்ம ரூபத்தை நீதான் என்று உணர வைப்பவர்.

**39. ஐயர் என்பவர் யாவர்?**

சீடனின் சந்தேகம் தெளிய, முதலும் முடிவுமாகிய அறிவு நீதான் என்று அறிவிப்பவர்.

**40.வெய்யர் என்பவர் யாவர்?**

ஞானச் செல்வர்களைப் போல் பொய் வேடம் தரித்து, பணம் பறிக்கும் பயித்தியங்கொண்டு எவ்விடத்திலும் அறிவீனரை மயக்கித் திரிபவர். (வெய்யர்=கொடியவர்)

**41.மூடம் என்றால் என்ன?**

தான் யார் என்பதை மறந்து மூச்சடைக்க முயலுதல்.

**42. கேடு என்றால் என்ன?**

குற்றம் இல்லாதவன் தன் குற்றத்தை நீக்க எண்ணுதல்.

**43. பாடு என்றால் என்ன? (பாடு துன்பம்)**

துன்பமானது சுழுத்தியில் இல்லாது போகும். மீண்டும் விழிப்புக்கு வந்தவுடனே துன்பமானது பற்றிக்கொள்ளும்.

**44. வீடு என்றால் என்ன?**

விருப்பும், வெறுப்பும் சலிப்பும் இல்லாததே வீடாகும்.

**45. பெரியர் என்பவர் யாவர்?**

மகிமையும், பெருமையும் விரும்பாதவர்கள்.

–தொடரும்

அருட்பெருஞ்ஜோதி !
அருட்பெருஞ்ஜோதி !!

தனிப்பெருங்கருணை
அருட்பெருஞ்ஜோதி !

# தவத்திரு. சதீஷ் அடிகளார்

எல்லாம் வல்ல அருட்பெருஞ்ஜோதி ஆண்டவரின் அருளால் இவ்வுலகிற்கு வருவிக்கவுற்றவர் வள்ளல் பெருமானார். வள்ளல் பெருமானாரின் கொள்கைக்கும் கோட்பாடுகளும், அவரின் அருட்பா பாடல்களும் உலக உயிர்கள் பயனடைய வாழ்ந்து வழி காட்டிக் கொண்டு இருப்பவர். நமது சதிஷ்ராஜ் அடிகளார் ஐயா அவர்கள்.

அவரால் உருவாக்கப்பட்ட அருள்ஜோதி அன்ன ஆலய தொண்டு நிறுவனத்திலும் அருள்ஜோதி குருகுலப்பாடசாலை மற்றும் அருள்ஜோதி தொலைக்காட்சியிலும் பல அருளாளர்கள் இணைத்து அருள் செயல்பாடுகளை அனைவரையும் செய்ய வைத்து இன்பத்தை அனுபவத்திக் கொண்டு இருக்கின்றார்.

ஒரு மனிதனின் பெருவாழ்வு என்பது–அவர்கள் வாழும் பொழுது ஒவ்வொரு அசைவையும் இந்த பிரபஞ்சம் கவனித்துக் கொண்டே இருக்கின்றது. இதனை பதிவு செய்து கொண்ட பிரபஞ்ச சக்தி அதனை திரும்ப அளித்து அவரால் உருவாக்கப்பட்ட அனைத்து நற்செயல்களும் சிறப்பாக செயல்பட வழி வகுத்துக் கொண்டு இருக்கின்றது.

பசி தீர்ப்பது பரம புண்ணியம் என்று 1995இல் அருள்ஜோதி அன்ன ஆலயத்தை உருவாக்கினார்.

குவலயம் செழிக்க குருகுலம் என்று 2002 இல் குருகுல பாடசாலை அமைத்தார். நாளும் நலம பெற நல்லதைப்பார் என்று 2013இல் அருள்ஜோதி தொலைக்காட்சியும் அருள்ஜோதி youtube channel உருவாக்கினார்.

## அருள்ஜோதி அன்ன ஆலயத்தின் பசி தவிர்த்தலின் சேவை

| Year | Per Day Served | Year | Month | Days | Total |
|---|---|---|---|---|---|
| 1995 Jan | 40 | 0.08 | 1 | 30 | 1,200 |
| 1995 Feb-Dec | 100 | 0.92 | 11 | 330 | 33,000 |
| 1996-2000 | 1000 | 5 | 60 | 1800 | 18,00,000 |
| 2001-2021 | 5000 | 21 | 252 | 7560 | 3,78,00000 |
| 2022-Mar 2023 | 7000 | 1.25 | 15 | 450 | 31,50,000 |
| | | | | Overall Total: | 4,27,84,200 |

| | | |
|---|---|---|
| **1995 முதல் 1மாதம் தினம் 40 பேர்** | 40x30 | =1200 |
| **1995 முதல் பிப்ரவரி முதல் தினம் 100 பேர்** | 100x330 | =33,000 |
| **1996 முதல் 2000 வரை தினம் 1000 பேர்** | 1000x1800 | =18,00,000 |
| **2001 முதல் 2021 வரை தினம் 5000 பேர்** | 5000x7560 | =3,78,00,000 |
| **2022 முதல் மார்ச் 2023 வரை தினம் 7000 பேர்** | 7000x450 | =31,50,000 |



| | |
|---|---|
| **1995ம் வருடம் ஜனவரி மாதம்** | **– 1200** |
| **1995ம் வருடம் பிப்ரவரி முதல் டிசம்பர் வரை** | **– 33,000** |
| **1996 முதல் 2000 வரை** | **– 18,00,000** |
| **2001 முதல் 2021 வரை** | **– 3,78,00,000** |
| **2022 முதல் 2023 மார்ச் வரை** | **– 31,50,000** |
| **பசி தீர்ப்பதில் பயனடைந்தவர்கள்** | **4,27,84,200** |

இன்று வரை சதிஷ்ராஜ் அடிகளார் ஐயா அவர்களின் உயர்ந்த எண்ணத்தினாலும் வள்ளல் பெருமானாரின் தனிப்பெருங்கருனையினாலும் அருட்பெருஞ்ஜோதி ஆண்டவரின் பரிபூரண ஆசிர்வாதத்தினாலும் அருள்ஜோதி அன்ன ஆலயத்தின் சேவைக்கு உதவி புரிந்தவர்கள் உடம்பாலும், உயிராலும் அனைவரின் உணர்வினாலும் பயன் அடைந்தவர்களின் விவரம் மேலே குறிப்பிடப்பட்டுள்ளது. ஏப்ரல் 10 நம் சதிஷ்ராஜ் அடிகளார் ஐயா அவர்களின் அருள்தினம் ஆகும். அவரால் விதைக்கப்பட்ட விதைகள் விருட்சமாக வளர்த்துக்கொண்டு சென்னையை அடுத்து மாவட்டங்கள், மாநிலங்கள, நாடு கடந்து, உலகு அனைத்திலும் சன்மார்க்கத் தொண்டு நிலைத்து இருக்க என்றும்



வாழ்ந்துக்கொண்டு இருக்கின்றார். நமது அருள்ஜோதி அன்ன ஆலய சதிஷ்ராஜ் அடிகளார் அவரை புரிந்துக்கொண்டவர்கள் சன்மார்க்கத்தை புரிந்துக்கொண்டவர்கள்.

நன்றி

**தயவுத்திருமதி– தனலட்சுமி அம்மா.**












# பழவேற்காடு அருள்ஜோதி குருகுல பாடசாலை 19 ஆம் ஆண்டு விழாவின் மாணவ மாணவிகளின் கலை நிகழ்வுகள்















# உயிரின் உரிமை

## உயிரின் இயக்க மையம்

### முட ஆட்டுக்குட்டி

**"எவ்வுயிர்த் திரளும் என்னுயிர் எனவே**
**எண்ணி நல்இன்புறச் செயவும்**
**அவ்வுயிர்களுக்கு வரும் இடையூற்றை**
**அகற்றியே அச்சம் நீக்கிடவும்**
**செவ்வையுற்று உனது திருப்பதம் பாடிச்**
**சிவசிவ என்று கூத்தாடி**
**ஒவ்வுறு களிப்பால் அழிவுறாது இங்கே**
**ஓங்கவும் இச்சைகாண் எந்தாய்.**

இங்கு இறைவன் புகழ்பாடுவதை விட உயிர்களை இன்புறச் செய்வதையே முதன்மைப்படுத்துகிறார் வள்ளலார்.

தனது இச்சை என்று வரிசைப்படுத்துவதில் உயிர்களுக்கு இன்பம் அளிப்பதையே முதலில் வைக்கிறார்.

**அப்பா நான் வேண்டுதல் கேட்டு அருள்புரிதல் வேண்டும்**
**ஆருயிர்கட்கு எல்லாம்நான் அன்புசெயல் வேண்டும்**
**எப்பாரும் எப்பதமும் எங்கணும்நான் சென்றே**
**எந்தைநினது அருட்புகழை இயம்பியிடல் வேண்டும்**

என்ற பாடலிலும் இவ்வாறே அமைந்துள்ளது. உயிர்களின் துயர் தீர்ப்பதையே உயர் வழிபாடாகக் கொண்டார் வள்ளலார் என்பதை இதன் மூலமும் உணரமுடிகிறது.


வள்ளலார் ஒரு நாள் மேட்டுக்குப்பத்தில் உபதேசம் செய்து கொண்டிருந்தார். அதனை முட ஆட்டுக்குட்டி கூட்டத்தின் ஓரமாக நின்று கேட்டுக் கொண்டிருந்தது. உபதேசக்கூட்டம் முடிந்து அணைவரும் சித்தி வளாகத்தை வலம் வந்தனர். முட ஆட்டுக்குட்டியும் வலம் வந்தது. கருங்குழியிலிருந்து தனக்காக வந்த உணவைப் பெருமான் அம்முட ஆட்டுக்குட்டிக்கு அளித்தார். அன்றிலிருந்து அம்முட ஆட்டுக்குட்டி உபதேசம் கேட்பதையும், சித்தி வளாகத்தை வலம் வருவதையும், திருஅருட்பிரகாச வள்ளலாரின் திருக்கரங்களால் உணவு பெற்று உண்பதையும் வழக்கமாகக் கொண்டது.

திருஅருட்பிரகாச வள்ளலாரின் திருவுருவப் படத்தில் பின்னணியாக அமைந்திருக்கும் தருமச்சாலை, ஞானசபை, சித்திவளாகம் ஆகியவற்றுடன் இந்த முட ஆட்டுக் குட்டியையும் காணலாம்.

### பசி நீக்கல்

அக்காலத்தில் தாசில்தார் வெளியே செல்லும்போது ஒருவர் வளைந்த ஊதுகொம்பு ஊதிக்கொண்டே முன்போவது வழக்கம். அவ்வாறே மஞ்சகுப்பம் தாசில்தார் வெங்கடசுப்பு என்பவர் வள்ளலார் பிரசங்கம் கேட்க ஒரு நாள் வந்தபோது ஊதுகொம்பு ஊதுபவர் மிக வேகமாய் ஓடிவர நேரிட்டது. பசியால் அவரது தேகம் முழுவதும் நடுங்கியது. அன்றைய தினம் தாசில்தார் பிரசங்கத்திற்கு வந்தவுடன் ஓடிவர

"இந்த வாழ்வு எத்தனை நாளைக்கு இருக்கும்? கொம்புகாரனைப் போக வேண்டிய ஊருக்கு முன்னமே அனுப்பி அவ்வூர்க்குச் சிறிது தூரத்தே ஊதினால் போதாதோ" என்று இரக்கநெறியுடன் வருத்தத்தோடு கூறிவிட்டு, உடனே ஊதுகொம்பு ஊதியவருக்கு பசித்துன்பம் போக்கி வருத்தம் கலைத்தார் வள்ளலார். அதன் பின்னரே மற்றையர் உண்டனர் கருணை உள்ள இடத்தில்தானே கடவுள் இருப்பார். கருணை நன்முயற்சியில் பழகல் வேண்டும் என்பதல்லவா வள்ளலாரின் வாக்கு.



எங்கே கருணை இயற்கையின் உள்ளன அங்கே விளங்கிய அருட்பெருஞ்சிவமே

### மனுமுறை கண்ட வாசகம்

சென்னை சாஸ்திர விளக்கச் சங்கத்தார் கேட்டுக் கொண்டதற்கு இணங்க வள்ளலாரால் வரையப்பட்டது ஒரு வரலாற்றுக்கதை. மகனை முறை செய்த ஒரு மன்னவனின் கதை அது. பெரிய புராணத்தில் வரும் மனுச்சோழர் வரலாற்றை விரித்து உரைநடை நூலாய்க் கொடுத்திருக்கிறார் நமது பெருமானார் அதற்கு மனுமுறைகண்ட வாசகம் எனப் பெயரிட்டார். கருணையே வடிவான கடவுள் எழுதியதனால் வரிக்கு வரி காருண்யம் பிறக்கிறது. கருணை இல்லாதவர் நெஞ்சிலும் காருண்யத்தை விளைக்கிறது. இங்கு ஒரு வரலாற்றுக் கதைவடிவில் ஜீவகாருண்ய ஒழுக்கம் விளக்கப்பட்டுள்ளது.

உரைநடையில் மடை திறந்து, உயிர்இரக்கத்தைக் கடை விரிக்கிறது இக்கதை. ஆழ்மனதின் அடிதொட்டு கருணையைத் தேர்விட்டு அழைத்து வருகிறது. 1854 ஆம் ஆண்டு அச்சிடப்பட்ட இந்நூல் வள்ளலாரால் எழுதப்பட்டு அவர் காலத்திலேயே அச்சிடப்பட்ட முதல் உரைநடை நூல்.

–தொடரும்


**ஓவியங்கள்:**

5 முதல் 15 வயது வரை உள்ள மாணவ–மாணவிகளிடமிருந்து எனக்கு பிடித்த சைவ பிராணிகள் என்ற தலைப்பில் ஓவியங்கள் வரவேற்க்கப்படுகின்றன.

**இளைஞர் கட்டுரைகள்**

சன்மார்க்க அனுபவங்களை பகிர்ந்து கொள்ளும் இளைஞர்களுக்கு ஓர் அரிய வாய்ப்பு. தங்களின் சன்மார்க்க கட்டுரைகள், மற்றும் கவிதைகள் அருள்ஜோதி மாத இதழ் புத்தகத்தில் புகைப் படத்துடன் பிரசுரிக்கப்படும்.



**குறிப்பு:**

**நமது அருள்ஜோதி அன்ன ஆலயத்தில் தொண்டு புரிந்து கொண்டிருக்கின்ற தாங்களும், தங்களின் அனுப வத்தை நமது இல்லத்திற்கு வருகின்ற சேவதாரிகளிடம் தாங்கள் தொண்டு புரிந்து கொண்டிருக்கின்ற அனுப வத்தை பகிர்ந்து கொண்டு பதிவு செய்வதன் மூலமாக தங்களின் அனுபவமானது அருள்ஜோதி புத்தகத்தில் வெளியிடப்படும்.**

# அருள்ஜோதி அன்ன ஆலய சேவாதாரிகள்



திரு.இரவிசந்திரன் ஐயா



திரு.முத்துராஜ் ஐயா



திரு.ஐயப்பன் ஐயா



திரு.ஞானபிரகாசம் ஐயா



திரு.ஜெகதீசன் ஐயா



திருமதி.சாந்தி அம்மா



திருமதி. சந்தானலட்சுமி அம்மா



செல்வி.ஜெயஸ்ரீ

**மேற்கண்ட படங்களில் உள்ளவர்கள் நமது அன்ன ஆலய சேவாதாரிகள். மற்றவர்கள் அன்ன ஆலய பெயரை உபயோகப்படுத்தினால் கீழ்கண்ட தொலைபேசியில் தொடர்பு கொள்ளவும் :**

**90030 34056**



அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்ஜோதி

எல்லா உயிர்களும் இன்புற்று வாழ்க

# அருள்ஜோதி கல்வி அறக்கட்டளை



எண்: 1 மதுரைசாமி மடம் குறுக்குத்தெரு,
செம்பியம், பெரம்பூர், சென்னை–600011

தொலைபேசி: 9003034056, 9600040788

இணையதளம்: www.aruljothitrust.com மின்னஞ்சல்: aruljothipadasalai@gmail.com

## நீங்களும் கல்வித்தொண்டு செய்யலாம்!

அன்புடையீர், வணக்கம்! வாழ்த்துக்கள்!! தாங்களும் தாங்கள் செய்யும் தொழிலும் தொண்டும் மேன்மேலும் சிறந்து விளங்க போற்றி வாழ்த்துகிறோம்.

பொன்னேரி தாலுக்காவில் கடல் சூழ்ந்த லைட்ஹவுஸ் குப்பம் உள்ளது. அவ்விடத்தில் மேற்படி அறக்கட்டளையின்கீழ் அருள்ஜோதி குருகுலப் பாடசாலை என்ற பெயரில் எங்கள் பள்ளி நடைபெறுகிறது. இப்பள்ளியில் எல்.கே.ஜி முதல் 5–ஆம் வகுப்பு வரை ஆங்கில வழி கல்வி வகுப்புகள் நடைபெற்று வருகின்றன. அரசு அங்கிகாரம் பெற்ற (பதிவெண் 24/239–2005) இப்பள்ளியில் 350 பிள்ளைகள் கல்வி பயின்று வருகின்றனர். அறக்கட்டளையின் சார்பாக இப்பள்ளியில் பயிலும் பிள்ளைகளுக்குச் சீருடையும் பாடப் புத்தகங்களும் வழங்கப்படுகின்றன. இந்தப் புண்ணியத் தொண்டில் தாங்களும் பங்கேற்கலாம். இன்னும் சில ஆண்டுகளில் இப்பள்ளியில் பயிலும் மாணவர்கள் உயர்கல்வி பெற்று வாழ்வில் உயர்வடைவதுடன், வள்ளலார் போதனைகளையும் மற்றும் ஆன்மீக கல்வியும் பெறுவதனால் ஒழுக்க நெறியுடன் உத்தம சீலர்களாகவும் திகழ்ந்து வீட்டிற்கும் நாட்டிற்கும் பெருமை சேர்ப்பர் என்பது திண்ணம்.



| அன்ன தர்மம் விவரம்: | |
|---|---|
| காலை உணவு........................................ | ரூ.2000/– |
| மதிய உணவு ........................................ | ரூ.5000/– |
| **மதிய சிறப்பு உணவு** | |
| (வடை, பாயாசம் உட்பட)............................ | ரூ.8000/– |

இங்ஙனம்

எல்லா உயிர்களும் இன்புற்று வாழ்க
என்று எண்ணும்
**தவத்திருமதி. தனலட்சுமி அம்மையார்,**
தலைவர்

காணிக்கைகள் **ARULJOTHI EDUCATIONAL TRUST** என்ற பெயருக்கு செக்காகவோ, டி.டி.யாகவோ அனுப்பலாம். பெறப்படும் காணிக்கைகளுக்கு வருமானவரி சட்டம் 80 ஜி பிரிவின்படி வரிவிலக்கு உண்டு.

அருளாளர் பதிவு படிவம்

பெயர்:

பதிவெண்: __________

முகவரி:

## அன்னதானத்தின் சிறப்பை பற்றிய அருள்ஜோதி அன்னஆலய அன்பர்களின் அனுபவங்கள்

எங்களின் பெயர் அகல்யா ஞானசுந்தரம், சுஜாதா, காவியா நாங்கள் காலடிபேட்டையில் வசித்து வருகிறோம். நாங்கள் கடந்த ஐந்து வருடமாக அருள்ஜோதி அன்னஆலயத்திற்கு தொண்டு செய்கிறோம்.

மற்றவர்களுக்கு உதவுவது என்பது எனது வாழ்க்கைக்கு ஒரு புதிய நோக்கத்தை கொடுத்திருக்கிறது. என்னால் முடிந்த ஒரு சிறு காணிக்கையை அருள்ஜோதி அன்ன ஆலயத்திற்கு செலுத்துவதன் மூலம், என்னை மிகுந்த அறிவாற்றல் உடையவராக ஈடுபடுத்தி இருக்கிறது. இந்த உலகில் உள்ள மக்களுக்கு முக்கியமான ஒன்று, பயனுள்ள ஒன்றை செய்கின்றேன் என்று நினைக்கும் பொழுது இறைவனின் குழந்தையாக எங்களை தேர்ந்தெடுத்துவிட்டார் என்று பெருமிதம் கொள்கிறேன்.

எனது வாழ்க்கை மற்றும் எதிர்கால லட்சியங்கள் ஆகியவற்றில் அதிக திருப்தியை உணரக்கூடிய சாதனை உணர்வை பெற்றுவிட்டேன். இந்த தொண்டானது எனது வாழ்வில் கவலையின் தாக்கங்களை குறைக்க உதவுகிறது. இறையாற்றலை மனதில் ஏற்படுத்துவதற்கு, ஒரு சிறந்த வழிகாட்டியாக அருள்ஜோதி அன்னஆலயம் செயல்படுகிறது. அதில் நாமும் பயணித்து அவரவர்களால் இயன்றவரை ஏழைகளின் துயர் துடைக்க கரம்பிடிப்போம்.

## அருள்ஜோதி புத்தகம் படிப்பதன் மூலம் ஏற்படும் அனுபவங்களும்,நன்மைகளும்

திருவொற்றியூர், உஷாராணி நமச்சிவாயம் நாங்கள் கடந்த 4 வருடமாக அருள்ஜோதி புத்தகத்தை படிக்கின்றோம். அருள்ஜோதி புத்தகத்தோடு நாம் ஒன்றிப் போகும் போது அது வேறோர் உலகத்துக்கே என்னை அழைத்துச் செல்லும். நான் வாசிக்கின்ற எல்லாமே தகவல்களாக என் மனதில் பதிகின்றது. இது ஒரு வகை அறிவு. அந்த அறிவு எனக்கு வாழ்க்கையில் நான் எதிர்கொள்ளும் சவால்களுக்கு பெரிதும் உதவுகின்றது. அந்த அறிவை அருள்ஜோதி புத்தகத்தின் மூலம் நான் முழுமையாக பெறுகிறேன். எனது மனம் ஒன்றில் குவிய உதவுகிறது. இந்த புத்தகம் என் மனதை எழுச்சி கொள்ள செய்கிறது. நான் என் பயணத்தின் போதும், மறக்காமல் கையோடு அருள்ஜோதி புத்தகத்தை எடுத்துச் செல்வேன். இப்புத்தகத்தின் மீது எனக்கு அளப்பரிய காதல் உண்டு. நேரம் பொன் போன்றது என்பார்கள். அத்தகைய நேரத்தை இன்றைக்கு தொலைக்காட்சியிலும், சமூக வலைத்தளங்களிலும் வீணாக்கி கொண்டிருக்கிறோம். அதை எல்லாம் தவிர்த்து நேரத்தை இதுபோன்ற நல்ல விஷயங்களில் கழியுங்கள். நமது நேரத்தை பயனுள்ளதாக மாற்றுங்கள்.



## அரிசித்தொண்டு அருளாளர்களுக்கு தயவான வேண்டுகோள்

ஆலய சேவாதாரிகள், அரிசித்தொண்டு அருளாளர்களைக் குறித்த நேரத்தில் சந்திக்க காலதாமதம் ஏற்படுவதினாலும், தங்களின் தயவான தொண்டு, குறித்த நேரத்திற்கு ஆலயத்திற்குக் கிடைக்க வேண்டிய காரணத்தினாலும், அருள்ஜோதி அன்ன ஆலயம் புதியதொரு வழிமுறையை வகுத்துள்ளது. அருளாளர்கள் தாங்கள் தயவுடன் அளிக்கும் அரிசித்தொண்டு மற்றும் கல்வித்தொண்டு காணிக்கையினைத் தங்களது வங்கியிலேயே (தற்போது இந்தியன் வங்கி அருளாளர்கள் மட்டும்) அருள்ஜோதி அன்ன ஆலயம் மற்றும் அருள்ஜோதி கல்வி அறக்கட்டளை கணக்கிலேயே செலுத்திடலாம். அருளாளர்கள் தற்போது வழங்கி வரும் ரூ.100/– காணிக்கையினை ரூ.150/–ஆக (நூற்றிஐம்பதாக) உயர்த்தி வழங்கிடுமாறு தயவுடன் கேட்டுக் கொள்கிறோம். **பெறப்படும் காணிக்கைகளுக்கு வருமானவரி சட்டம் 80 ஜி பிரிவின்படி வரிவிலக்கு உண்டு.**

From

To

The Manager

..........Bank

.............................. Branch

Chennai



**தொடர்புக்கு**
**9003034056/ 25570770**

Sir,

I am having Saving /Current Account with your Bank and the Account No. is ................................ I request you kindly to transfer a sum of Rs................. (Rupees.........................................................only) to the following Account Holder on 5th of every month from May 2014 onwards.

| Details | Aruljothi Anna Alayam | Aruljothi Educational Trust |
|---|---|---|
| Account No.: | 403721163 | 403723477 |
| Bank: | Indian Bank | Indian Bank |
| Branch: | Jawahar Nagar | Jawahar Nagar |
| IFSC No.: | IDIB 000P132 | IDIB 000P132 |

தங்கள் இல்லத்திற்கு வரும் சேவாதாரியிடம் இப்படிவத்தினைப் பெற்றுக் கொண்டு, அதனைப் பூர்த்தி செய்து, தங்களது வங்கியின் மேலாளரிடம் சேர்ப்பித்து விட்டால் தங்களது காணிக்கை பிரதி மாதம் 5ஆம் தேதி அருள்ஜோதி அன்ன ஆலயம் / கல்வி அறக்கட்டளை வங்கி கணக்கில் சேர்ந்து விடும். பின்னர் இத்தகவலை அருள்ஜோதி அன்ன ஆலயத்திற்கு தொலைபேசி அல்லது மின்னஞ்சல் மூலமாகத் தெரிவித்து விடவேண்டும். இத்திட்டத்தில் அனைத்து அருளாளர்களும் பங்கு கொள்ள தயவுடன் கேட்டுக் கொள்கிறோம்.

***Email: annaalayam@gmail.com***

**அருள்ஜோதி இயற்கை மூலிகை**

எண்:33, பிரதான சாலை, கென்னடிசதுக்கம், திரு.வி.க.நகர், பெரம்பூர், சென்னை – 600011



**சுகர் கேப்சூல்ஸ், கபச்சூரணம், ராஜகல்ப கேப்சூல்ஸ், வாயு சூரணம், மூலிகை பல்பொடி ஆகிய மூலிகை பொடிகளும் கிடைக்கும்.**

தொடர்புக்கு: **ஆர்.வாசு, 9952055040**

# இராமலிங்க சுவாமிகள் திருவுள்ளம்

## தோற்றுவாய்

தங்கமே யனையார் கூடிய ஞான சமரச சுத்தசன் மார்க்கச் சங்கமே கண்டு களிக்கவுஞ் சங்கஞ் சார்திருக் கோயில்கண்டிடவுந் துங்கமே பெருஞ்சற் சங்கநீ டூழி துலங்கவுஞ் சங்கத்திலடியேன் அங்கமே குளிர நின்றனைப் பாடி ஆடவும் இச்சை காண் எந்தாய்

சற்சபைக் குரியார் தம்மொடுங் கூடித்
தனித்தபே ரன்புமெய் யறிவும்
நற்சபைக் குரிய ஒழுக்கமும் அழியா
நல்லமெய் வாழ்க்கையும் பெற்றே
சிற்சபை நடமும் பொற்சபை நடமும்
தினந்தொறும் பாடிநின் றாடித்
தெற்சபை யுலகத் துயிர்க்கெலாம் இன்பஞ்
செய்வதென் னிச்சையாம் எத்தாய்'

இனி எப்பொருள்பற்றி முன்னுரை நிகழ்த்துவது? எல்லாருள்ளமும் எவர்மீது படிந்து கிடக்கிறதென்று யான் சொல்ல வேண்டுவதில்லை. அவரைப் பற்றிப் பேசுவதே. பொருத்தம் என்று எனக்குத் தோன்றுகிறது.

இராமலிங்க சுவாமிகள் இற்றைக்கு நூற்றாறு ஆண்டு முன்னர் நந் தமிழ் நாட்டிற் தோன்றியவர்; ஐம்பதாண்டுகட்கு முன்னர் மறைந்தவர். அவரை எதன் வாயி லாக உணர்ந்து பேசுவது? அவரை உணர்தற்குரிய கருவி யுண்டோ? உண்டேல் அஃது எது?

சிலர் அவரது வரலாற்றை நினைக்கலாம். சிலர் அவரது திருவாய்மொழியை நினைக்கலாம். இவ்விரண்டனுள், சுவாமிகள் திருவாயினின்றும் பிறந்த 'அருண்மொழி என்னுந் தமிழ்த் தேன்கூட்டைக் கோடலே சிறப்பு. நமது நாட்டில் சரித்திரமுறையில் பெரிதும் வரலாறுகள் எழுதப்படுவதில்லை. சிலர் பகைமை மேலீட்டான் ஒருவரை இழித்துப் பழிப்பதுண்டு. சிலர் அன்பு மேலீட்டான் ஒருவரை வானில் ஏற்றிப் புகழ்வதுண்டு. இவ்வரலாறுகளைக் கொண்டு ஒருவர் உள்ளத்தை எங்ஙனம் உணர்தல் கூடும்?

திருவள்ளுவரை உணர அவர் அருளிய திருக்குறளை யான் கொள்வேனே யன்றிப் பிறரால் எழுதப்பெற்ற அவர்தம் வரலாற்றைக் கொள்ளேன்; அவ்வாறே சேக்கிழாரை உணர்தற்குப் பெரியபுராணத்தையே கொள்வேன்; மற்றவரையும் அவரவர் நூல்கொண்டே உணர முயல்வது எனது வழக்கம். வழக்கம். அவ்வழக்கை ஒட்டியே இராமலிங்க சுவாமிகளைக் காண, அவர் அருளிய திருவருட்பா' என்னுங் கண்ணாடியை உறுகருவியாகக் கொள்கிறேன்.

இக்காலத்தில் படங்கள் எழுதப் படுவதும் பிடிக்கப் படுவதும் உங்கட்குத் தெரியும். அப்படங்கள் உருவத்தை உணர்த்துமே யன்றி உள்ளத்தை உணர்த்தமாட்டா. உள் ளத்தை உணர்த்தும் படங்களும் உண்டோ? உண்டு. அவைகள் யாரை? அவைகளே நூல்கள். ஒருவரது உள்ள நிலையை அவர் எழுதிய நூல்கள் வாயிலாக உணர்வதே சால்பு.

புகைப்படங்களும் பிறவும் மலியும் இந்நாளில், காவியப் படங்களின் அருமை அருகிவருகிறது. நூல்கள் வாயிலாக நூலுடையாரின் உள்ளத்தையும் உணரலாம்; கூர்த்த மதியால் அவர்தம் உருவத்தையும் உணரலாம். அவ்வுணர்வு. மீண்டும் உலகில் புத்துயிர் பெறல்வேண்டும்.

அன்பர்களே! இராமலிங்க சுவாமிகளின் அருள் கனிந்த நெஞ்சங் கொண்ட அழகிய வடிவைக் காண 'அருட்பா' என்னும் பளிங்கறையை நோக்குவோம். அருட் பாவை ஆராய்ந்தால் பற்பல செம்பொருள் பெறலாம். அவற்றை ஈண்டு நான்கு கூறாகத் தொகுத்துக் கொள்கிறேன்.

(i) சுவாமிகள் உலகிற்கு அறிவுறுத்தியது என்னை என்பது.

(ii) அவ்வறிவுறுத்தலை நடையில் கொணர்தற்கு அவர் கோலிய முறை.

(iii) அம் முறைபற்றி நடந்தமையால் அவர் பெற்ற பேறு.

(iv) அப்பேறு பெறுதற்கு அவர் இளமையில் எம் முயற்சியில் தலைப்பட்டார் என்பது.

### க.அறிவுறுத்தல்

சுவாமிகளின் அறிவுறுத்தல் அவர் அருளிய திருமுறை களில் பன்முகங் கொண்டு பெருக்கெடுத் தோடுகிறது. அம் பெருக்குத் தேங்கி நிறைந்த ஏரிபோல் காட்சியளிக்கும் இடம் ஒன்றுளது. அதுவே ஆறாந் திருமுறை. அத்திரு முறைக்கு முகம்போல ஒளிர்வது அருட்பெருஞ் சோதி அகவல். அவ் வகவலை அருட்பாவின் அட்டவணை அல்லது பொருளடக்கம் என்றுங் கூறலாம். அவ்வகவல், சுவாமிகளின் அறிவுறுத்தலைச் சுருங்கச் சொல்லி விளங்க வைக்கிறது.

சுவாமிகள் உலகிற்கு அறிவுறுத்தியதைச் சுருங்கக் கூறின், 'அருட்பெருஞ் சோதி தனிப்பெருங் கருணை என்று கூறலாம்.

இன்னும் அவர் அறிவுறுத்தலை அவரால் காணப்பெற்ற ஷடாந்த சமரச சன்மார்க்க சங்கம் என்னும் பெயரும் பொருளும் நனிவிளங்கச் செய்யும். இச் சங்கப் பெயரை யும் பொருளையும் ஒருமைப்படுத்தி, அவற்றின் உள்ளுறைமை 'அருட்பா' என்னுங் கருவி கொண்டு ஆராய்ந்தால், சுவாமிகளின் திருவுள்ளம் நன்கு புலனாகும். ஆகவே, அத் துறையில் சிறிது இறங்கலாமெனக் கருதுகிறேன்.

### ஷடாந்த சமரச சன்மார்க்க சங்கம்

### க. ஷடாந்தம்

ஷடாந்தம் என்பது ஆறு கோடி என்னுந் தமிழ் பொருளுடையது.ஈண்டுக் கோடி என்றது முடிவு அல்லது ஈறு என்னும் பொருளின் மேற்று. 'எழுகோடி மந்திரம் என்னும் வழக்கை ஓர்க. 'மந்திரங்கள் எழுகோடி ஆதவி னால்' என்றார் உமாபதி சிவனாரும்.

ஷடாந்தத்தின் விரிவு என்னை? விரிவு இராமலிங்கசுவாமி களாலேயே விளக்கப்பட்டிருக்கிறது. பலவிடங்களில் பாச் செய்யுளாகவும், சிலவிடங்களில் உரைச் செய்யுளாகவும் ஷடாந்தத்தைச் சுவாமிகள் விளக்கிக் காட்டியுள்ளார்கள்.

"தூயக லாந்தச் சுகந்தரு வெளியெனும்
ஆயசிற் சபையி லருட்பெருஞ் சோதி
ஞானயோ காந்த நடத்திரு வெளியெனும்
ஆனியில் சிற்சபை யருட்பெருஞ் சோதி
விமலபோ தாந்தமா மெய்ப்பொருள் வெளியெனும்
அமலசிற் சபையி லருட்பெருஞ் சோதி
பெரியநா தாந்தப் பெருநிலை வெளியெனும்
அரியசிற் றம்பலத் தருட்பெருஞ் சோதி
சுத்தவே தாந்தத் துரியமேல் வெளியெனும்
அத்தகு சிற்சபை யருட்பெருஞ் சோதி
சுத்தசித் தாந்தச் சுகப்பெரு வெளியெனும்
அத்தனிச் சிற்சபை யருட்பெருஞ் சோதி
நாதாந்த போதாந்த யோகாந்த வேதாந்த
நண்ணுறு கலாந்த முடனே
நவில்கின்ற சித்தாந்த மென்னுமா றந்தத்தின்
ஞானமெய்க் கொடி நாட்டியே
மூதாண்ட கோடிக ளொடுஞ்சரா சரமெலாம்
முன்னிப் படைத்தன் முதலாம்
முத்தொழிலு மிருதொழிலு முன்னின் றியற்றியைம்
மூர்த்திகளு மேவல் கேட்ப
வாதாந்த முற்றபல சத்திகளோ டுஞ்சத்தர்
வாய்ந்துபணி செய்ய இன்ப
மாராச்சி யத்திலே திருவருட் செங்கோல்
வளத்தொடு செலுத்து மரசே
சூதாண்ட நெஞ்சினிற் றோயாத நேயமே
துரியநடு நின்ற சிவமே
சுத்தசிவ சன்மார்க்க நீதியே அருட்பெருஞ்
சோதிநட ராஜ பதியே

# வள்ளலாரின் புத்தகங்கள்

| | |
|---|---|
| 1.HOW SOUL BECOME LIGHT | - ரூ.120 |
| 2.தற்சுதந்திர இன்மை | - ரூ.50 |
| 3.ஞானசரியை | - ரூ.40 |
| 4.திருவருட்பிரகாச வள்ளலார் வாழ்வில் நடந்த அற்புதங்கள் | - ரூ.20 |
| 5.மகா மந்திரம் | - ரூ.5 |
| 6. திருவருட்பிரகாச வள்ளலார் அருளிய உபதேசங்கள் | - ரூ.10 |
| 7. திவ்ய ஒளி | - ரூ.50 |
| 8. அருட்குறள் | - ரூ.50 |
| 9. ஐந்தாம் திருமுறை | - ரூ.200 |
| 10. ஆறாம் திருமுறை | - ரூ.150 |
| 11. ஆறாம்திருமுறை மற்றும் உரைநடை | - ரூ.500 |
| 12. சுத்த சன்மார்க்கம் வினா-விடை | - ரூ.30 |
| 13. அருட்பெருஞ்ஜோதி அட்டகம் விளக்கவுரை | - ரூ.40 |
| 14. அகவல் பாராயண திரட்டு (சிறியது) | - ரூ.15 |
| 15. அகவல் பாராயண திரட்டு (பெரியது) | - ரூ.30 |

# மூலிகை மருந்துகள்

| | |
|---|---|
| 1. கூட்டுசூரணம் (50கி) | - ரூ.60 |
| 2.கரிசாலை (50கி) | - ரூ.60 |
| 3.திரிபலா (50 கி) | - ரூ.60 |
| 4. முடவட்டான் கால்சூப் (50 கி) | - ரூ.100 |
| 5.முக்குபர் மூலிகை தைலம் 200 (எம்.எல்.) | - ரூ.300 |
| 6. அகத்தியர் கருவப்பட்டை பற்பொடி (80 கி) | - ரூ.45 |
| 7.கரிசாலை கண் மருந்து | - ரூ.70 |
| 8.மூலிகை தைலம் | - ரூ.40 |





# வடலூர் அருட்பயணம்

## அன்பார்ந்த வாசகப் பெருமக்களுக்கு ஓர் நற்செய்தி!

ஒவ்வொரு மாதப்பூச நன்னாளன்று, அருள்ஜோதி அன்ன ஆலயம் சார்பாக, வடலூர் அருட்பயணம் ஏற்பாடு செய்யப்படுகிறது.

<u>அருட்பயணத்தில் தரிசிக்கப்படும் திருத்தலங்கள்</u>

1.சத்திய தருமச்சாலை, 2.சத்திய ஞானசபை, 3. வள்ளல் பெருமான் அவதரித்த மருதூர் இல்லம், 4.கருங்குழி இல்லம் 5.தீஞ்சுவை நீரோடை மற்றும் 6.சித்திவளாகம்.

இந்த புனித பயணத்தில் கலந்துகொள்பவர்கள் ஏழு நாட்களுக்கு முன்னதாகவே பதிவு செய்ய வேண்டும். பதிவு கட்டணம் ரூ.900 (உணவு உள்பட) பயணம் அருள்ஜோதி அன்ன ஆலயத்தில் இருந்து காலை 6.30 மணிக்கு புறப்பட்டு மறுநாள் காலை 5.00 மணிக்கு அழைத்துவரப்படுவர். எனவே பெயர்களை முன்பதிவு செய்துகொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

**தொடர்புக்கு: 9003034056**

**மாத பூச நாள்: 27-04-2023**

**குறிப்பு: அடுத்த பயணம்: 24-05-2023**



## ஆருயிர்களுக்கெல்லாம் அன்பு செய்தல்

யானை முதல் எறும்பு வரை உள்ள ஜீவனின் ஆன்மாக்களே திருச்சபையாகவும், அதன் உள்ளொளியே கடவுளாகவும் பாவித்து, எல்லா உயிர்களையும் தம்முயிர் போல் கொள்ள வேண்டும்.இந்த குணம் வந்தவர்களே இறந்தவர்களை எழுப்புகின்ற வல்லமை பெற்றவர்கள். அவர்களே ஞானிகள். கடவுள் நிலையை பெற்றவர்கள்.

உயிருள்யாம் எம்முள் உயிர் இவை யுணர்ந்தே
உயிர்நலம் பரவுகென்று உரைத்தமெய்ச் சிவமே

எல்லா உலகமும் என்வச மாயின
எல்லா உயிர்களும் என்னுயி ராயின
எல்லா ஞானமும் என்ஞான மாயின
எல்லா வித்தையும் என்வித்தை யாயின
எல்லாப் போகமும் என்போக மாயின
எல்லா இன்பமும் என் இன்ப மாயின
எல்லாம் வல்லசிற் றம்பலத் என் அன்பர்
எல்லாம் நல்கியென் உள்ளத்துள் உள்ளாரே.

–6ம் திருமுறை



# எவ்வளவு சாப்பிட வேண்டும்?

எவ்வளவுதான் சாப்பிட வேண்டும் என்ற அளவை எப்படிக் கண்டுபிடிப்பது? அதற்கு சுலபமாக வழிமுறை இருக்கிறது. பசி எடுத்தால் மட்டுமே சாப்பிடவேண்டும், சாப்பிடும்பொழுது கவனத்தை உணவில் வைத்துச் சுவையை இரசித்து, ருசித்துச் சாப்பிட்டால் ஒரு குறிப்பிட்ட அளவுக்கு மேல் நமக்குச் சாப்பிடப் பிடிக்காது. முதல்முறை வாயில் எடுத்து வைக்கும்பொழுது பிடித்த அதே உணவு எப்பொழுது நமக்குப் பிடிக்கவில்லையோ, போதும் என்று அர்த்தம்.

வழக்கமாக நீங்கள் காலையில் 10 இட்லி சாப்பிடும் நபராக நீங்கள் இருந்தால் கவனத்தை இட்லியின் மேலும், இட்லியிலுள்ள சுவையின் மீது கவனம் வைத்துச் சாப்பிட்டுப் பாருங்கள். நான்கு இட்லி சாப்பிட்டபிறகு ஐந்தாவது இட்லியைப் பார்த்தால் உங்களுக்குச் சாப்பிட பிடிக்காது. எப்பொழுது பிடிக்கவில்லையோ உங்கள் அளவு முடிந்து விட்டது என்று பொருள்.



கவனத்தை உணவில்வைத்துச் சாப்பிடும்பொழுது நமக்கு அளவு தெரியும், கவனத்தை செல்போனிலோ, தொலைக்காட்சியிலோ அல்லது பேச்சிலோ வைத்துச் சாப்பிடும்பொழுது நமக்கு அளவு தெரிவதில்லை. எனவே தயவுசெய்து சாப்பிடும்பொழுது கவனத்தை உணவிலும், சுவையிலும் வைத்துச் சாப்பிட்டுப் பாருங்கள். ஒரு குறிப்பிட்ட அளவுக்குமேல் நம்மால் சாப்பிடமுடியாது.

எனவே நமது கருத்து. எவ்வளவு சாப்பிட வேண்டும் என்பதற்கு மில்லிகிராம், கிலோ கிராம், தராசு போன்ற அளவு முறைகள் தேவையில்லை. பசி எடுத்தால் சாப்பிட வேண்டும். ருசித்து சாப்பிட வேண்டும். மனத்திற்கு எப்பொழுது போதுமென்று எண்ணம் ஏற்படுகிறதோ அப்பொழுது நிறுத்த வேண்டும். என்வே ஆசைதீர சாப்பிடுங்கள். கொஞ்சம் அதிகமாகச் சாப்பிட்டால் ஒரு தவறும் கிடையாது. நமக்குச் சீக்கிரமாகப் பசித்துவிடும். எனவே தயவுசெய்து சாப்பிடும்பொழுது அளவு பார்க்காதீர்கள். உங்கள் மனத்திற்குப் பிடித்த அளவு ஆசைதீரச் சாப்பிடுங்கள். ஆனால் ஒரேயொரு விஷயத்தை ஞாபகம் வைத்துக்கொள்ளுங்கள். மீண்டும் பசி எடுக்கும்வரை வேறு எதையும் சாப்பிடக்கூடாது.

எனக்குக் கண்டிப்பாகச் சாப்பிடுவதற்கு அளவு வேண்டும் என்று நீங்கள் நினைத்தால் உங்களுக்கு ஒரு வழிமுறையைச் சொல்கிறேன். உங்கள் வீட்டிலுள்ள நாய்க்கு ஒரு கப்பு சாதம் கொடுங்கள். அது சாப்பிட்டு முடித்த பிறகு மீண்டும் வேண்டுமென்று வாலை ஆட்டிக்கொண்டு நிற்கும். மீண்டும் ஒரு கப் சாப்பாடு கொடுங்கள். மீண்டும் கேட்கும். மூன்றாவது கப் சாப்பாடு கொடுத்தால் அதில் பாதியை மட்டும் சாப்பிட்டுவிட்டு மீதியை அங்கேயே விட்டுவிட்டு நடக்க ஆரம்பிக்கும், அந்த நாயை வா, இந்தா சாப்பிடு என்னிடம் இன்னும் ஏழு கப் சாப்பாடு உள்ளது என்று நீங்கள் கொட்டினாலும் அது சாப்பிடாது. ஏனென்றால் ஒரு நாய்க்குத் தெரியும். நாம் எவ்வளவு சாப்பிட வேண்டும் என்று. மனிதர்களுக்குத தெரிவதில்லை. ஏனென்றால் நாய் இரசித்து, ருசித்துச் சாப்பிடுகிறது மனிதன் பசிக்காமல், ருசிக்காமல் சாப்பிடுகிறான்

எனவே, நாம் பசி எடுத்தால் மட்டுமே சாப்பிட வேண்டும்.

சீகாழி.கண்ணுடைய வள்ளல் அருளிச் செய்த

# ஒழிவில் ஒடுக்கம்

**திருப்போரூர் சிதம்பரச்சுவாமிகள் உரையிலிருந்து வினா–விடையாக தொகுத்தவர். ஜோதி.வீ.கோட்டீஸ்வரன், காஞ்சிபுரம்.**

*1. போதத்து இருளில் எழு பாநு என்றும்; வேதாகமப் பவுரிவீசம் களாச நிலை என்றும் கூறுவதை விளக்கிக் காட்டுக?*

ஆன்ம அறிவை மறைத்துக் கொண்டிருக்கின்ற ஆணவமாகிய இருளை நீக்கச் சிவத்தை அறிவிக்கும் திருவருளை ஞான சூரியன் என்றும்;

ஓர் நாடக அரங்கின்கண் நடிக்கின்ற கூத்தர், பலருக்கும் முதல்வனாகிய கூத்தன் வந்து கைவாரங்கொண்டு (கை தூக்கி நின்று வாழ்த்துதல்) நிறுத்தி, அவ்வரங்கின்கண் உள்ள குறுமன்னியர்களுக்கெல்லாம் முதல்வனாகிய மகாமன்னியனையே புகழ்ந்து சுட்டி நின்றார் போலவும்;

வேதாகமதங்கள் கூறிய பல சமய நெறிகளையும், அச்சமயங்களுக்குரிய கடவுளரையும் கடந்து நின்ற அக்கடவுளருக்கெல்லாம் முதல்வனாகிய சிவத்தை, கரம் உயர்த்திக் காட்டிய திருஞானசம்பந்தரைக் குரு, தோத்திரமாகப் போற்றுகின்றார் கண்ணுடைய வள்ளல், (பவுரி–கூத்து; களாச–பிரம்பு)

## பொதுவில் உபதேசம்

**1.வேதா கமப்பவுரி வீசுங் களாசநிலை**
**ஆதார வெற்பில் அபிடேகம்–போதத்(து)**
**இருளிலெழு பாநு எனது ஒழிவில் இன்பக்**
**கருணைபொழி வான்எடுத்த கை.**

**2. தன்னிழப்பை என்னகற்றுச் சாதிப்பான் சற்குருவோம்**
**மன்னுபெருஞ் சீய மதயானை–தன்னடைமேற்**
**சொற்பனத்தே தோன்றித் துடிப்பற்றுக் கேவலமாய்**
**நிற்பது போல் பாரான் எனின்.**

*தன்னிழப்பை (ஆணவத்தை) என்ன கற்று சாதிக்க முடியும்? உதராணம் காட்டி விளக்குக?*

★ ஒருவன் தன்னிடமுள்ள ஆணவத்தை ஒழியென்றால், சாத்திர நூல்களைக் கற்பதும், அவற்றுள் கூறியவாறு தற்போதத்தால் நிட்டை கூடி எவ்வாறு சாதித்து அடைய முடியும் என்பதாம்.

★மதயானையின் கனவில் சிங்கம் தோன்ற, அதனது மதகேர்வம் கெடுவது போல், சீடனின் உள்ளும் புறமும் நிறைந்து நின்ற தற்போதம் கெடும்படி, குருவானர் அருட்கண் பார்வையாலே அது ஒழிந்து போகும் என்பதாம்.

★அதிதீவிர பக்குவர்க்கு ஆயினும் ஞானாசியரால் அன்றிப் போத நாசங் கூடாதென்று கூறியவாறு என்பதாம்.

**3. கூலித்தொழிலாளர் கொண்டு விற்போர் போன்ற குரு**
**வேலைப் பகடிகளை மேவாதே–காலம்போல்**
**பார்த்திருக்க வைத்த பரமகுரு வைப்பரவ**
**வார்த்தையிலை தீண்டா மனம்.**

*கூலித்தொழிலாளரையும், பொருள் விற்கும் வணிகரையும் போன்று உலகக் குருவை பகடிக் கூத்தாடி என்பது ஏன்?*

★வேலை செய்து கூலி வாங்கும் தொழிலாளரைப் போன்றும்; பொருளை விற்கும் வணிகரைப் போன்றும்; உலகக்குரு, பிறருக்குச் சில கிரியைகளைச் செய்து காட்டியும், உபதேசங்களைக் கூறியும், பணம் பறிக்கும் வகையில் குரு என்ற பெயரைக் கொண்டு இருக்கின்றவர்களை பகடிக்கூத்தாடி என்றார்.

(பகடிக்கூத்து–உள்ளது போன்று இல்லாததைக் காட்டும் வெளிவேடம்)

**4. குட்டித் திரள்கரடி யாறொழுகக் கோன்குதித்துக்**



**கட்டிப் புதைந்த கதையாகும்–துட்டமலப்**
**பித்திலே மூத்தவர்கள் பேய்பிதற்றாம் பேதையர்க்குப்**
**புத்திபோல் காட்டும் பொருள்.**

*துட்டமலப் பித்திலே மூத்தவர்கள் பேய் பிதற்றல் என்பது என்ன? உதாரணம் காட்டி விளக்குக ?*

★கொடிதாகிய மும்மலப் பைத்தியத்தால் முதிர்ந்த போலி குரு, ஓர் கால் கூறியது. ஓர்கால் கூறாது பேய் பிடித்தால் போன்று பிதற்றுகின்றவரிடம் அபக்குவன் கேட்கும் உபதேசம் போலாகும்.

★பலகுட்டிகளோடும் கரடியானது ஆற்றுவெள்ளத்தில் அடித்துச்செல்ல அதனது கரையின்கண் நின்ற ஓரிடையன் அதனை ஆடென்று கருதி, அந்நீரில் குதித்து அதனைப்பற்ற, அதுவும் இவனைப் பற்ற, அதுவும் இவனும் அவ்வெள்ளத்து ஆழ்ந்தனர் என்று உலகத்தார் சொல்லும் கதை போலாகும் என்றார்.

**5. குருட்டரிப்ப னார்க்குங் குபேரனென்று பேரோ**
**கருப்பிரத மோத்தையோ காட்டும்–அருட்தரித்த**
**ஆசானைப் போல்வாரோ ஆறாறுக்(கு)அப்புறத்தே**
**பேசா திருத்தவல்லாப் பேர்.**

*போலிகுரு, ஞானகுருவைப்போல் ஆக முடியுமா ? உதாரணங் காட்டி விளக்கு?*

★ குப்பை மண்களைச் சேகரித்து அதில் பொன்முதலிய அரித்தெடுக்கின்ற, குருட்டு அரிப்பாளன் என்பவருக்குக் கைப்பரிசமே யன்றிக் கண்பார்வை இன்மையால் பொற்பொடியே தோன்றாது; அப்படி இருக்க அவனைக் குபேரன் என்று எப்படிக்கூறமுடியும்?

★ (2–ம்) வெள்ளாடு கரும்பின் தழையைத்தான் தின்னும், தன் குட்டிக்கும் அதைத்தான் கற்றுக்கொடுக்கும். ஆனால் கரும்பின் ரசத்தை அறிய மாட்டாது அதுபோல

★ போலி குருவானவர் மந்திரக்கலை, தந்திரக்கலையை ஆராய்ந்து, அதிற்கூறிய வண்ணம் சரியையாதிகளைச் செய்து அவற்றால் வரும் விடயானந்த அனுபவம் பெறுவதேயன்றிச் சிவானந்த அனுபவம் அணுவளவேனும் பெற இயலாது என்பதாம்.

## வள்ளலார் கரிசாலை கசாயம் தயாரிக்கும் முறை

வடலூர் வள்ளல் பெருமான் நமக்கு அருளிய ஞானக் கூட்டுச்சூரணக் கஷாயம் செய்வது எவ்வாறு?

கரிசலாங்கண்ணி கூட்டுச்சூரணம் என்பது வள்ளல் பெருமான் அருளிய சுத்த சன்மார்க்கத்தின் மிகவும் முக்கியமானது. ஏனென்றால் கரிசலாங்கண்ணி, முசுமுசுக்கை, தூதுவாளை, சீரகம் என்ற நான்கு பொருட்களை சேர்த்து செய்யக்கூடிய சூரணம். அந்த சூரணத்தை வைத்து கஷாயம் செய்வது எப்படி என்பதை பார்க்கலாம். கரிசலாங்கண்ணி ஒரு பங்கு மற்றவை மூன்று ¼,¼ பங்கு. கரிசலாங்கண்ணி உடலில் உள்ள அசுத்தங்களை நீக்க கூடியது. உடல் உள் உறுப்புகளை வலுப்பெற செய்யக்கூடியது. கல்லீரலை பலப்படுத்தும். ரத்தத்தில் சிவப்பணுக்களை அதிகரிக்க கூடியவை.

அடுத்தபடியாக தூதுவாளை கபத்தை அளிக்க கூடியது. கவனத்தை உண்டு பண்ண கூடியது. மனதை அமைதிப்படுத்தக்கூடியது ஒரு மூலிகை.

அடுத்து முசுமுசுக்கை நுரையீரல் சம்பந்தப்பட்ட கபத்தை அறிக்கை கூடிய ஒரு அற்புதமான ஒரு மூலிகை. அடுத்தபடியாக சீரகம், அகம் என்ற உள் உடம்பை சீர் செய்யக்கூடிய ஒரு அற்புதமான ஒன்று. இவைகளை தினசரி (அ) வாரத்தில் குறைந்தது 5 நாட்கள் சாப்பிட்டு வர வேண்டும்.

கசாயம் செய்ய ஒரு பாத்திரத்தில் இரண்டு கப் தண்ணீர் ஊற்றி, கொதித்ததும் மூலிகை பொடி (கூட்டுச்சூரணம்) சேர்த்து கொதிக்க விடவும். அதில் வெள்ளம் அல்லது நாட்டு சர்க்கரை சேர்த்து 10 நிமிடம் கொதித்ததும், அடுப்பை அணைத்துவிட்டு பத்து நிமிடம் மூடி வைக்க வேண்டும். இதை முறையாக பயன்படுத்தினால் கஷாயம் ஆனது ரத்தத்தில் கலந்து உடலுக்கு ஆரோக்கியத்தை ஏற்படுத்தும். இந்த கஷாயமானது கல்லீரலை பலப்படுத்தும். பித்தநோய் சிறுநீரக கோளாறு, கணையம் மற்றும் உடம்பில் இருக்கக்கூடிய உறுப்புகள் போன்றவற்றை சரிசெய்து பலமடைய வைக்கிறது.

# அருள்ஜோதி TV

அருள்ஜோதி

Aruljothi TV APP

**TCCL கேபிள் TV Channel No : 125**

## நிகழ்ச்சிகளின் சன்மார்க்கிகளின் கருத்துக்கள்...













**அருள்ஜோதி தொலைக்காட்சியில் ஒளிப்பரப்பான நிகழ்ச்சிகளை 'ARULJOTHI YOUTUBE CHANNEL' மூலம் காணலாம்.**

**ARULJOTHI MEDIA**
No.:33, KENNEDY SQUARE MAIN ROAD,
TVK NAGAR, PERAMBUR,
CHENNAI – 600011
**CONTACT: 7305263516 044–35519288**
EMAIL: aruljothitelevision@gmail.com
WEB: aruljothitv.com

**BANK DETAILS**

**ARULJOTHI SANMARKKA TRUST**
**INDIAN BANK**
**A/C.No.:6206014778**
**IFSC CODE: IDIB000P034**
**BRANCH : PERAMBUR**

**Published by: S. Dhanalakshmi ,**
Published from New No.:33/Old No:17, Main Road, Kennedy Square, Thiru.Vi.Ka.Nagar, Perambur, Chennai – 11 Editor: Thayathirumati. Dhanalakshmi Ammaiyaar Printed at bharanipress, No77, Venkatadhiri street, kosapet, Chennai - 600012





G Pay accepted here

**Aruljothi Anna Aalayam**
90030 34056

9003034056@okbizaxis

G Pay · Paytm UPI · amazon · iMobile

BHIM UPI

ARULJOTHI Tamil Monthly Magazine
Date of Publication 10-15th of Every Month
அஞ்சல் நாள் : ஏப்ரல் 2023
REGISTERED WITH THE REGISTRAR OF NEWS PAPER INDIA No.70781/99
Postal Registration No.TN/CCN/391/2021-2023 POSTED AT PATRIKA CHANNEL EGMORE

# அன்பார்ந்த அரிசித் தொண்டு அருளாளர்கள் கவனத்திற்கு!

**தாங்கள் இதுகாலம் மாதாமாதம் அளித்துவரும் காணிக்கையின் மூலம், பல்வேறு மக்களின் பசிப்பிணியினைப் போக்குவதற்கு பல்வேறு பணிகள் செயலாக்கப்பட்டுள்ளன.**

**பிரதி மாதம் குறிப்பிட்ட தினங்களில் ஆலய சேவாதாரிகளின் தங்களது இல்லத்திற்கு நேரிடையாக வந்து, தாங்கள் அளிக்கும் காணிக்கையினை பெற்று செல்கின்றனர். இருந்த போதிலும் சில சமயங்களில், சில அருளாளர்களின் இல்லத்திற்கு செல்ல இயலவில்லை.**

**இதனால், அருளாளர்கள் தங்களது வங்கி கணக்கில் NACH திட்டத்தின் மூலம் தங்களது காணிக்கையினை செலுத்தி விடலாம். இத்திட்டம் குறித்து, விரிவாக, ஆலய சேவாதாரிகள் தங்களிடம் தெரிவிப்பார்கள்.**

**மேலும் இதுவரை ஆயிரத்து இருநூற்று ஐம்பத்து மூன்று (1253) அரிசித் தொண்டு அருளார்கள் இத்திட்டத்ன் மூலம் தங்களது காணிக்கையினை செலுத்தி வருகின்றனர்.**

**தாங்களும் தங்களது காணிக்கையினை வங்கி மூலம் செலுத்தும் திட்டத்தில் சேர்ந்து பயன்பெறுமாறு, தயவுடன் கேட்டுக் கொள்கிறோம்.**



